Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 20 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :297 புரட்டாதி 05 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 22 செப்ரெம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051



## திலீபனை அஞ்சலிக்கத் தடை; 24 அன்று மன்றின் கட்டளை!

யாழ்ப்பாணம், செப்.22

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலிஸாரின் விண்ணப்பத்துக்கு அமைய நீதிமன்றால் வழங்கப்பட்ட தடை உத்தரவை நீடிப்பதா அல்லது நீக்குவதா என்ற கட்டளை எதிர்வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை வழங்கப்படும் என நீதிவான் நீதிமன்றம்

18 ▶



# திலீபனின் போராட்டம் மிக உன்னதமானது

## அதை யாரும் கொச்சைப்படுத்த முடியாது என்கிறார் அமைச்சர் வாசுதேவ

கொழும்பு, செப்ரெம்பர் 22

திலீபனின் உண்ணாவிரதப் போராட்டம் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் உன்னதமான தியாகப் போராட்டம். சிங்களவர்களைப் பொறுத்தவரையில் பயங்கரவாதப் போராட்டம். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் அவரது போராட்டம் ஒரு தமிழ் மகனினதும், அந்த இனத்தினதும் விடுதலைக்கான போராட்டமே.

18 ▶

### ஆளும்கட்சியிடம் கோப் தலைமை

# நரிகளிடம் கோழிக் குஞ்சை கொடுப்பதைப் போன்றதே!

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, செப்.22

பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றக் குழுவின் (கோப்) தலைமைப்பதவி ஆளுநங்கட்சிக்கு வழங்கப்படுமானால் அது நரிகளிடம் கோழிக் குஞ்சுகளை ஒப்படைக்கும் செயல்போல் ஆகிவிடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு

18 ▶

### முச்சந்தி முரளி

" இப்பிடி படிச்சு
எங்கேயோ போக வேண்டிய
இளசுகள் எல்லாம்
ஏன் இப்பிடி
போகுதுகள் ? "



# மோடியுடன் மஹிந்த 26ஆம் திகதி சந்திப்பு!




கொழும்பு, செப்.22

பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கும் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையே எதிர்வரும் 26 ஆம் திகதி சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது. தொலைகாணொளி ஊடாக இடம்பெறவுள்ள இந்த சந்திப்பின் போது இரு நாடுகளுக்கும் இடையேயான இரு தரப்பு உறவுகள் மற்றும் பிராந்திய விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்

18 ▶

## 3 உயிர்களைக் காவு கொண்ட கட்டடம் சட்டவிரோதமானது!



கொழும்பு, செப்.22

கண்டி புவெலிகட பகுதியில் நேற்று இடிந்து விழுந்து மூன்று உயிர்களைக் காவு கொண்ட 5 மாடிக் கட்டடம் விதிமுறைகளை மீறி அமைக்

18 ▶

## சஜித்தின் பக்கம் தாவிய மஹிந்த ஆதரவாளர்கள்!

கொழும்பு, செப்.22

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியைச் சேர்ந்த மூவர் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் நேற்று இணைந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியினை சேர்ந்த மதுசங்க குறுப்பு ஆராச்சி மற்

18 ▶

## சட்டப் புத்தகத்தில் இருந்து நீக்கப்பட வேண்டியது "19"

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, செப்.22

20ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். 20ஆவது அரசமைப்புச் சட்ட வரைபு தொடர்பாக விடுக்கப்பட்ட

18 ▶

## பணிப்பாளர் இடமாற்றம் அரசியல் பழிவாங்கலா?

யாழ்ப்பாணம், செப். 22

யாழ்ப்பாண மாவட்ட சமுர்த்தி உதவிப் பணிப்பாளராகக் கடமையாற்றிய க.மகேஸ்வரன் திடீரென இடமாற்றப் பட்டுள்ளார்.

18 ▶

## 3ஏ சித்திபெற்ற இளைஞர் ரயில் முன் பாய்ந்து சாவு!



### கிளிநொச்சியில் சோகம்

கிளிநொச்சி, செப்.22

ரயிலுடன் மோதி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கிளிநொச்சி,

18 ▶

## முகமாலையில் இன்று அகழ்வு !



கிளிநொச்சி, செப்.22

முகமாலையில் மனித என்பு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பகுதியில் மீண்டும் இன்று அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்த அகழ்வுப் பணிகள்

18 ▶

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.66,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது
தங்கக்கடன் 011 200 88 88 செலான் வங்கி

## “ஐஸ்கிறீம்” வாகனத்தை மறித்து பணம் கொள்ளை

### கல்வியங்காட்டில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப்.22

ஐஸ்கிறீம் விற்பனை வாகனம் ஒன்றை வழிமறித்த சிலர், வாகனத்துக்குள் ஏறி

18 ▶

# பொருளாதார மத்திய நிலையத்தில் கமநல நிலையங்களுக்கு முன்னுரிமை

## வழங்கவேண்டும் என்று கோரிக்கை

**வவுனியா, செப் 22**
**வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலைய கடைத்தொகுதியில் வவுனியா மாவட்டத்தில் உள்ள எட்டு கமநல சேவை நிலையங்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் ஒவ்வொரு விற்பனை நிலையங்கள் ஒதுக்கப்பட வேண்டுமென கமக்காரர் அமைப்பினர் கோரிக்கை விடுத்தனர்.**

வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்திலேயே அவர்கள் மேற்கண்ட கோரிக்கையை முன்வைத்தனர்.
இதன்போது அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவராக கலந்துகொண்ட வடமாகாண ஆளுநர் இது தொடர்பில் மாவட்ட செயலாளர் நடவடிக்கைகளை மேற்கொண்டு சரியான முடிவை அறிவிப்பார் என தெரிவித்தார்.
அத்துடன் விவசாயிகளின் உற்பத்தி பொருள்களுக்கு வவுனியா சந்தையில் இடைத்தரகர்களால் அறவிடப்பட்டுவரும் 10 வீத தரகுப்பணத்தால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களுக்கு விவசாயம் சார்ந்த பொது அமைப்புக்களுக்கு முறையான அழைப்போ அல்லது அனுமதியோ வழங்கப்படுவதில்லை எனவும் தாம் பின் கதவால்த்தான் கூட்டத்துக்கு வரவேண்டியுள்ளது எனவும் முறையிட்டிருந்தனர்.
தரகுப் பண விடயம் தொடர்பாக தமக்கு எழுத்து மூலமாக முறையிடும்படி கூறிய இணைத் தலைவரான வடக்கு மாகாண ஆளுநர் விவசாய சங்கங்களை ஒருங்கிணைப்பு கூட்டங்களுக்கு முறையாக அழைப்பது தொடர்பில் தீர்வெதனையும் முன்வைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (து-110)

## உறவை விரிவுபடுத்த இலங்கை - ஆஸி பேச்சு

கொழும்பு, செப். 22
இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை விரிவுபடுத்துவதற்கான வழிகள் குறித்து இலங்கை மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு இடையில் நேற்று பேச்சு நடைபெற்றது.
அமைச்சர் தினேஷ் குணவர்தனவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ள ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் மொரைஸ் பெய்ன், மீண்டும் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டதற்கு அமைச்சருக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.
இரு வெளிவிவகார அமைச்சர்களும் பன்முக தன்மையை ஊக்குவிப்பதற்கும் விரிவுபடுத்துவதற்குமான வழிகள் மற்றும் வழிமுறைகள் குறித்து விவாதித்தனர் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு டுவீட் செய்துள்ளது. (து-இ)

## ச.தொ.ச. நிறுவன பணியாளர்கள் இருவர் கைது

ச.தொ.ச. நிறுவனத்தில் ஏற்பட்ட பெரு மோசடி தொடர்பான குற்றச்சாட்டின் கீழ் இரு சந்தேக நபர்களை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.
2017 ஆம் ஆண்டில் இடம்பெற்ற 56 மில்லியன் ரூபா நிதி மோசடி தொடர்பாக விசாரணையின்அடிப்படையில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு பெப்ரவரியில் ச.தொ.ச.வில் இடம்பெற்ற மோசடி தொடர்பான ஆவணங்கள் கொழும்பில் அமைந்துள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் சி.ஐ.டி.யினரால் மீட்கப்பட்டுள்ளது. (து-இ)

## பாதாள குழு உறுப்பினரின் மனைவி, மகன் கைது

கொழும்பு, முகத்துவாரம் பகுதியில் 'புளுமெண்டல் சஞ்ஜீவ' என அழைக்கப்பட்டு பாதாள உலக குழு உறுப்பினரின் மனைவி மற்றும் மகன் உட்பட மூவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.
இதன்போது அவர்களிடமிருந்து 30.3 கிராம் ஹெரோய்ன், ஐந்து கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் 129 ஆயிரம் ரூபா ரொக்கப் பணம் என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.
இதற்கிடையில் 'கல்கிஸை ரோஹா'என அழைக்கப்படும் மற்றொரு பாதாள உலக நபரின் நண்பர் ஒருவர் கந்தானவில் கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது அவரிடமிருந்து டி 56 துப்பாக்கி உட்பட பல ஆயுதங்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளில் ஈடுபட்டுவந்த 'கல்கிஸை ரோஹா' தற்போது விளக்கமறியலில் உள்ளார். (து-இ)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் 64 பேருக்கும் மறியல் நீடிப்பு

கொழும்பு, செப். 22
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட ஸஹ்ரானின் சகோதரி, சியோன் தேவாலய தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் உட்பட வெவ்வேறு 4 வழக்குகளை கொண்ட 64 பேரையும் எதிர்வரும் 05 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு காணொலி மூலம் மட்டக்களப்பு நீதிவான் ஏ.சி.ஏ றிஸ்வான் நேற்று உத்தரவிட்டார்.
கடந்த வருடம் ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் ஸஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் இவர்கள் ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தில் காத்தான்குடியை சேர்ந்த 63 பேர் கைது செய்யப்பட்டனர்.
இவர்களில் 5 பேர் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் 58 பேர் தொடர்ந்து விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ளனர். (து-இ)

## ஆசிரிய பயிலுநர் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின

கொழும்பு, செப். 22
2017/2018 கல்வியாண்டில் ஆசிரிய கலாசாலைகளில் கல்வி பயின்று 2019 இல் இறுதிப்பரீட்சைக்குத் தோற்றிய ஆசிரிய பயிலுநர்களுக்கான இறுதிப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.
பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் நேற்று திங்கட்கிழமை இவை வெளியிடப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகள் தமது சுட்டெண்ணை பதிவிட்டு பரீட்சைப் பெறுபேறுகளைப் பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (இ)

## நிதி நிறுவனங்களுக்கு எதிராக 100க்கும் மேற்பட்ட முறைப்பாடு

அரசு வங்கிகள் மற்றும் அரசுடன் இணைந்த நிதி நிறுவனங்களில் முறைகேடுகள் குறித்து ஆராயும் குழுவுக்கு 100 க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.
அந்தந்த வங்கிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் பொது மக்களால் குறித்த முறைப்பாடுகள் அளிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் மேற்படி குழுவில் முறைப்பாடுகளை முன்வைக்க பொது மக்களுக்கு வழங்கப்பட்ட காலக்கெடுவும் செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.
2015 ஜனவரி 8 ஆம் திகதி முதல் அரசுக்கு சொந்தமான வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் நடந்ததாகக் கூறப்படும் முறைகேடுகள் மற்றும் முறைகேடுகள் குறித்து ஆராய குழுவை நியமிக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இந்தக் குழுவுக்கு முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி சிசிரா ரத்நாயக்க தலைமை தாங்குகிறார். மூன்று மாதங்களுக்குள் அதன் விசாரணைகளை ஒரு அறிக்கையைத் தொகுக்கும் பணி இந்த குழுவுக்கு உள்ளது. இந்த அறிக்கை பின்னர் நிதி அமைச்சின் செயலாளர் மூலம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (து-இ)

# மன்னர் காலம்போன்று 3 மாகாணங்கள் வரும்

## மாகாண சபைகள் அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 22
தற்போதைய மாகாண சபைகளை வரலாற்று ராஜ்யங்களான ருஹுணு, ராஜரட்டை, மாயரட்டையென்ற அலகில் பிரிப்பதற்கான திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது என உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.
சில கல்வியியலாளர்கள் அந்த முன்மொழிவை தன்னிடம் சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்துள்ளார். தற்போதைய மாகாண சபை முறையை ஒழிக்க வேண்டுமென்ற கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருவதாகவும் வீரசேகர தெரிவித்தார்.
மாகாணசபை முறையை ஒழிப்பதில் சிக்கல் இருந்தால், ருஹுணு, ராஜரட்டை மற்றும் மாயரட்டை என்ற மூன்று மாகாணங்களாக மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று முன்மொழியப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.
இரண்டு ஆண்டுகளாக புதிய ஆட்சி தெரிவு செய்யப்படாமல் மாகாண சபைகள் எவ்வாறு இயங்குகின்றன என்பது குறித்து தற்போது ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.
அரசமைப்பின் 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இந்தியா அழுத்தம் கொடுத்து வருவதாகவும், 13 ஆவது திருத்தத்தை ரத்து செய்வது குறித்து இந்தியாவுடன் விவாதிப்பேன் என நம்புகிறேன் என்றும் அவர் கூறினார். (து-இ)

# இணைந்த நேர அட்டவணைக்கு இ.போ.ச. ஒத்துழைக்கவில்லை

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் குற்றச்சாட்டு

வவுனியா,செப். 22

**வவுனியாவில் இணைந்த நேர அட்டவணையில் பொது மக்களுக்கான போக்குவரத்துச் சேவையை மேற்கொள்வதற்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வவுனியா சாலையினர் ஒத்துழைக்கவில்லை என வவுனியா தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

வவுனியா மாவட்டச் செயலகத்தில், நேற்று இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின்போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வடக்கின் நான்கு மாவட்டங்களிலும் நடைமுறையில் உள்ள இணைந்த நேர அட்டவணைச் செயற்பாடு வவுனியாவில் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனால் பேருந்துகளுக்கிடையில் போட்டித்தன்மை ஏற்பட்டு மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கான சரியான சேவையை வழங்கமுடியாதுள்ளது. 200 மில்லியன் ரூபா செலவழித்து அனைத்து வசதிகளுடனும், அமைக்கப்பட்ட பேருந்து நிலையம் இருக்கும் போது, அதன் வாசலில் தரித்து நின்று பேருந்துகள் சேவையில் ஈடுபடுகின்றன. இது தொடர்பில் சரியான தீர்மானம் ஒன்றைப் பெறுவதற்கு போக்குவரத்துச் சபையினர் ஒத்துழைக்கவில்லை, உடனே வேலை நிறுத்தம் செய்கின்றனர். இவ்விடயம் தொடர்பாக பல தரப்புகளுடன் கூட்டங்கள் நடத்தப்பட்டும் உரிய தீர்வு பெறப்படவில்லை என்றார்.

வடக்கில் நான்கு மாவட்டங்களிலும் நடைமுறையில் உள்ள இணைந்த நேர அட்டவணை வவுனியாவில் மாத்திரம் நடைமுறைப்படுத்த முடியாமல் இருப்பது தொடர்பாக இணைத்தலைவரான ஆளுநர் விசனம் தெரிவித்தார். அதனை நடைமுறைப்படுத்துவதற்கு மாவட்டச் செயலர் நடவடிக்கை எடுப்பதுடன் பொலிஸாரின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

(ப-110)

## காரியாலயத்தில் வளங்கள் இல்லை

### நீரியல்வள அதிகாரி தெரிவிப்பு

முல்லைத்தீவு கொக்கிளாய் கடற்றொழில் பரிசோதகர் காரியாலயத்தில் போதியளவு வளங்கள் இல்லை என முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களஉதவிப் பணிப்பாளர் மோகனகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொக்கிளாய் கடற்றொழில் பரிசோதகர் காரியாலயம் இயங்கிக்கொண்டிருக்கின்றது. காரியாலயத்திலுள்ள தண்ணீர்ப் பம்பி திருடப்பட்ட காரணத்தால், அங்கிருந்த உத்தியோகத்தர், அக் காரியாலயத்தில் தங்கி நிற்காமல் முல்லைத்தீவு தலைமைக்காரியாலயத்தில் தங்கி நின்று கொக்கிளாயிலுள்ள அலுவலகத்துக்குச் சென்று வருகின்றார்.

கொக்கிளாய் காரியாலயம்வாரத்தில்ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் மக்கள் சந்திப்புக்காகத் திறக்கப்படுகின்றது. மக்கள் அவர்களது தேவைகளை இங்கு பூர்த்திசெய்துகொள்ளமுடியும். காரியாலயத்தினுடைய வசதிகள் பூர்த்தி செய்யப்பட்ட பிற்பாடுகாரியாலயத்தில் உரிய உத்தியோகத்தர் தங்கி நின்று பணிபுரிவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

-என்றார். (ப-246)

## வவுனியா பழைய பேருந்து நிலையத்திலும் சேவைகள்?

### திலீபன் எம்.பி. திட்டம்

வவுனியா,செப்.22

வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கும், ஒரு திட்டத்தை முன்வைத்து அங்கிருந்தும் பேருந்துச் சேவைகள் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற தனியார் பேருந்து உரிமையாளர் சங்கப் பொதுக்கூட்டத்தில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

புதியபேருந்துநிலையத்தில்பேருந்துகள்சீராகச்செயற்படஒருதிட்டத்தைமுன்வைக்கும்போதுபழையபேருந்து நிலையத்தில் இருந்தும் சேவைகள் இடம்பெறவும் திட்டம் முன்வைக்கப்படும். அதற்குத் தனியார் பேருந்து உரிமையாளர்களின் ஒத்துழைப்புத் தேவை. இரண்டு பேருந்து நிலையங்களுக்கும் தொடர்புகள் தேவையாகவே உள்ளன. அதனை நடைமுறைப்படுத்துவோம் -என்றார். (ப-110)



## புனர்வாழ்வு நிலையம் மன்னாரில் திறப்பு

மன்னார்,செப்.22

"போதையற்ற புதிய கிராமத்தை உருவாக்குவோம்" என்ற தொனிப்பொருளின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட போதைக்கு அடிமையானோரை இனங்கண்டு அவர்களின் அனுமதிக்கு மத்தியில் அவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நிலையம் மன்னார் எருக்கலம்பிட்டியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

எருக்கலம்பிட்டி சமூக அபிவிருத்தி மற்றும் ஜனாஸா நலன்புரிச்சங்கமும், எருக்கலம்பிட்டி பள்ளிபரிபாலன சபை, அதனோடு இணைந்த பொது அமைப்புக்களும் இணைந்து இந்த நிலையத்தைத் திறந்து வைத்தனர்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தான் நிலையத்தை திரைநீக்கம் செய்தார். (ப)



## வெற்றி கண்டது இஞ்சி செய்கை

முல்லைத்தீவு, செப். 22

முல்லைத்தீவைச் சேர்ந்த விவசாயி ஒருவரால் பரீட்சார்த்தமாக செய்கை பண்ணப்பட்ட இஞ்சிச் செய்கையில் அவர் வெற்றி கண்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடுப் பகுதியில் ஒரு விவசாயி பரீட்சார்த்தமாக இஞ்சிப் பயிர்செய்கையை மேற்கொண்டுள்ளார். இயற்கை உரத்தைப் பயன்படுத்தியே அவர் இஞ்சியைப் பயிரிட்டுள்ளார். அந்தப் பயிர் தற்பொழுது அறுவடைக்குத் தயார் நிலையிலுள்ளதாக அவர் பெருமிதமடைந்துள்ளார். அந்த விவசாயி கறுவாச் செடியையும், உற்பத்திசெய்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ப-113)

## உடற் கல்வியை கட்டாய பாடமாக்க அரசு திட்டம்

கொழும்பு, செப்.22

உடற் கல்வியைக் கட்டாயமாக்குவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. என்று கல்விச் சீர்திருத்தத்துக்கான இராஜாங்க அமைச்சின் செயலர் கலாநிதி எம். உபாலி சேதர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

இந்தத் திட்டம் ஆரோக்கியமான பிரஜைகள் எனும் கருப்பொருளின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு, மாணவர்களின் கட்டாய பாடமாக உள்வாங்கப்படவுள்ளது. ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறை காரணமாக 25 சதவீத மாணவர்கள் அதிக உடல் எடை, நீரிழிவு, இதய நோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என உலக சுகாதார அமைப்புக் கண்டறிந்துள்ளது. தரம் 6 தொடக்கம் பாடசாலையை விட்டு விலகும் காலம்வரை, இந்தப் பாடம் கட்டாயமாக்கப்படவுள்ளது, க.பொ.த சாதாரணதரம், மற்றும் உயர் தரங்களில் மேலதிக புள்ளிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற வகையில் இந்தப் பாடம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் பாடசாலைகளில் சுகாதார முறைமை முன்னேற்றப்படும்-என்றார். (ப)

## போதைக்கு அடிமையாவோர் எண்ணிக்கை அதிகரிக்கிறது

### மஸ்தான் எம்.பி. தெரிவிப்பு

மன்னார், செப். 22

மன்னாரில் மட்டுமல்ல நாட்டின் பல பகுதிகளிலும் போதைப் பொருளுக்கு அடிமைகளாகுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இது ஒரு சவாலாக உள்ளது. அதனைச் சீர்திருத்தும் ஓர் அமைப்பு எருக்கலம்பிட்டி கிராமத்தில் உருவாகியுள்ளது பாராட்ட வேண்டியது என்று நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

மன்னார் எருக்கலம்பிட்டியில் திறந்து வைக்கப்பட்ட போதைக்கு அடிமையானோருக்கான புனர்வாழ்வு நிலையத் திறப்பு விழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

போதைப் பொருள்கள் கொண்டுவரும் நுழைவாயில் மன்னார் மாவட்டம் என்றும் கூறப்படுகின்றது. பல புத்திஜீவிகளை உருவாக்கிய, பல நாடாளுமன்ற உறுப்பினர்களை உருவாக்கிய இந்தக் கிராமம் இன்று போதைப்பொருளுக்குப் பெயர்போன இடமாக இருக்கின்றது என கவலையுடன் தெரிவிக்கப்பட்டது. இந்த நற்பெயருக்குக் களங்கம் ஏற்படக்கூடாது என்பதற்காக இங்கு என்றும் இல்லாதவாறு இங்குள்ள சமூகம் ஒன்றிணைந்து சமூக சீர்திருத்தத்தில் ஈடுபட்டிருப்பது பாராட்டுக்குரியதும், ஏனைய இடங்களுக்கு முன்மாதிரியாகவும் திகழுகின்றது.

இவர்கள் மனம் தளராது தங்களின் தொடர் முயற்சியால் இன்று ஒன்றுபட்டவர்களாக இக் கிராமத்தில் நல்லதொரு முன்னெடுப்பை எடுத்துள்ளனர்.-என்றார். (ப-60)



வேகக்கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் வாகனம் கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்துக்குட்பட்ட புதுக்காடுப் பகுதியில் விபத்துக்குள்ளானது. மண் ஏற்றி வந்த டிப்பரே இவ்வாறு விபத்துக்குள்ளானது. பளைப் பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டனர். (ப-113)

### இடம்பெயர்ந்த வாக்காளர்களின் பதிவு தொடர்பில்

# வடக்கு இடம்பெயர்ந்தோர் மக்கள் பேரவை உதவித்தேர்தல் ஆணையாளருக்குக் கடிதம்

### கிராம அலுவலர்களுக்கு வழிகாட்டல்களை வழங்குமாறு கோரிக்கை

**கொழும்பு, செப். 22**

**இடம்பெயர்ந்த வாக்காளர்கள் தமது பூர்வீக இடங்களில் மீளப் பதிவுசெய்தல் தொடர்பில், வடக்கு இடம்பெயர்ந்தோர் மக்கள் பேரவை, மன்னார் உதவித் தேர்தல் ஆணையாளருக்கு அவசர கடிதம் ஒன்றை எழுதியுள்ளது.**

மேற்படி பேரவையின் தலைவர் எஸ்.எச். அப்துல் மதீன் கையெழுத்திட்டு அனுப்பியுள்ள கடிதத்தின் பிரதிகள், தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய மற்றும் தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களான என்.ஜே.அபேசேகர, பேராசிரியர் எஸ்.ஆர்.எச்.ஹூல் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'1990ஆம் ஆண்டு பலவந்தமாக வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டு புத்தளம், குருநாகல் மற்றும் இன்னோரன்ன பல மாவட்டங்களிலே வாழ்ந்து வந்த பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள், 2009 ஆம் ஆண்டு சமாதானச் சூழல் ஏற்பட்ட பின்னர், தமது சொந்தப் பிரதேசங்களுக்கு மீள்குடியேறினர். அவ்வாறு மீள்குடியேறியவர்கள், தங்களுக்கு தென் பகுதியில் வழங்கப்பட்ட உலர் உணவு மற்றும் கொடுப்பனவுகளை இல்லாமல் ஆக்கிவிட்டுத்தான் மீள்குடியேறினர்.

எனினும், அவர்களுடைய தொழில் ரீதியான மற்றும் தமது பிள்ளைகளின் கல்வி, சுகாதாரம், வைத்திய வசதிகள் போன்ற இன்னோரன்ன காரணங்களுக்காக இவர்களுடைய நிரந்தர இருப்பிடத்தை மன்னார் மாவட்டத்திலும், தற்காலிக இருப்பிடத்தை புத்தளம் மாவட்டத்திலும் ஏற்படுத்தியிருக்கின்றனர். என்றாலும், அவர்கள் மன்னாரிலும் புத்தளத்திலும் மாறிமாறி, தங்களது இடங்களில் வாழ்ந்து வருபவர்கள்.

இருந்தபோதும், அவர்களுடைய வாக்குகளை தமது பூர்வீக இடங்களிலேதான் பதிவு செய்துள்ளனர். அவ்வாறான வாக்காளர்களுக்கு கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது, கொத்தணி ரீதியான வாக்களிக்கும் வசதிகள், தேர்தல் ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டன.

இந்தநிலையில், கொத்தணி வாக்குச் சாவடிகளில் வாக்களிக்க வசதி பெற்றவர்களின், பதிவுகளை வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்குமாறு கிராம சேவகர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என, மக்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது நியாயமற்றதும், அடிப்படை மனித உரிமையை மீறும் செயலுமாகும்.

மேலும், எந்தவொரு பிரஜையும் ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளில் வசிப்பதற்கும் அவர்களின் வசதிக்கு ஏற்ப அவர்களை, தாங்கள் வாக்காளர்களாக பதிவு செய்து கொள்வதற்கும் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளதோடு அது ஒருவரின் சட்டபூர்வமான உரிமையுமாகும்.

உதாரணமாக, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க போன்ற தலைவர்கள் கொழும்பில் வசித்து வருகின்ற போதும் அவர்கள் முறையே அம்பாந்தோட்டை, பொலனறுவை, அத்தனகல்ல ஆகிய இடங்களில் தங்கள் வாக்குகளை பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே, இந்த நாட்டின் எந்தவொரு பிரஜையும் அவர் ஒரு வீட்டை வைத்திருக்கும் பிரதேசத்தில், அவர் தன்னை ஒரு வாக்காளராகப் பதிவு செய்வதற்கு அவருக்கு உரிமையுண்டு.

கொத்தணி வாக்காளர்களாகப் பதிவு செய்தவர்கள், தங்களுடைய சொந்தக் கிராமங்களிலே மீள்குடியேறி, தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ வீடுகளை அமைத்து வாழ்ந்துகொண்டிருந்தவர்கள்தான், தினமும் அங்குமிங்குமாக சென்று வருபவர்கள். இவர்களுக்குத்தான் கொத்தணி வாக்கு வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டன.

ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளில் வசிக்கும் எந்தவொரு பிரஜையும், தான் எந்த ஊரில் வாக்காளராகப் பதிவு செய்ய வேண்டும் என்பதை தீர்மானிக்கின்ற பொறுப்பு அவரையே சார்ந்ததாகும். அதேபோன்று, அந்த வாக்காளர் எடுக்கின்ற தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதா? இல்லையா? என்று தீர்மானிக்கும் அதிகாரமும் தேர்தல் ஆணைக்குழுவுக்கே இருக்கின்றது என்பதையும், கிராம சேவகர்களோ அல்லது உதவித் தேர்தல் ஆணையாளரோ அதனைத் தீர்மானிக்க முடியாது என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். ஆகவே, தயவு செய்து இவ்வாறானதொரு உத்தரவை தாங்கள் பிறப்பித்திருந்தால், உடனடியாக அதனை சரிசெய்து, கிராம சேவகர்களுக்கு உரிய வழிகாட்டல்களை வழங்குமாறு தாழ்மையுடன் கோருகின்றோம்' என்றுள்ளது. (ம-22)

## தங்கத்தின் விலையில் வீழ்ச்சி

கொழும்பு, செப். 22

உலக சந்தையில் தங்கத்தின் விலை குறைவடைந்துள்ளது என்று ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை ஆயிரத்து 900 அமெரிக்க டொலராகக் குறைவடைந்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் முதல் சமகாலம் வரை தங்கத்தின் விலை நூற்றுக்கு 23 வீதம் வரை அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் இந்த வாரம் ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை ஆயிரத்து 900 அமெரிக்க டொலராகக் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-இ)

## வடக்கில் கடும் காற்று

கொழும்பு.செப்.22

நாடு முழுவதும், குறிப்பாக வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும், திருகோணமலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் காற்றின் வேகம் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கை முழுவதும் காணப்படுகின்ற இயங்குநிலை தென் மேற்குப் பருவப்பெயர்ச்சி காரணமாக, நாட்டில் தற்போதுள்ள மழையுடனான வானிலை மற்றும் காற்று நிலைமை என்பன இன்று மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (ம-இ)

## கட்டுநாயக்கவை நவம்பரில் திறப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு, செப்.22

வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்காக கட்டுநாயக்க விமான நிலையத்தை எதிர்வரும் நவம்பரில் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக மூன்று அமைச்சுகள் இணைந்து கூட்டாகத் தயாரித்த திட்டம் ஒன்று அமைச்சரவை அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்படவுள்ளது எனத் தெரியவருகின்றது.

சுற்றுலா, சுகாதார மற்றும் விமான சேவைகள் ஆகிய 3 அமைச்சுகளும் திட்டத்தை தயாரிக்க ஆதரவு வழங்கியுள்ளன. சுற்றுலாத்துறை உட்பட கொரோனா வைரஸ் காரணமாக நாட்டுக்கு ஏற்பட்ட நட்டத்தை ஆராய்ந்த பின்னர் சுற்றுலா அமைச்சு தலைமையில் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்காக சுகாதார மற்றும் விமான சேவை அமைச்சுகளின் அனுமதி கிடைத்துள்ளது என சுற்றுலாத்துறை அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (வ-இ)

### இலங்கை பொலிஸ் வரலாற்றில் முதன்முறையாக

## பிரதி பொலிஸ்மா அதிபராக பெண் அதிகாரி தெரிவு

இலங்கை பொலிஸ் வரலாற்றில் முதன்முறையாக பிரதி பொலிஸ்மா அதிபர் பதவிக்கு பெண்ண பொலிஸ் அதிகாரியொருவர் நியமிக்கப்படவுள்ளார். இந்த நியமனத்துக்கான அனுமதியை தேசிய பொலிஸ் ஆணைக்குழு வழங்கியுள்ளது.

ஒன்பது சிரேஷ்ட பெண் பொலிஸ் அதிகாரிகளுள் ஒருவரை தெரிவுசெய்யுமாறுகோரி பெயர்ப் பட்டியல் பதில் பொலிஸ்மா அதிபரால், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டிருந்தது.

இதன்படி பொலிஸ் திணைக்களத்தின் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவைச் சேர்ந்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி பிம்சானி ஜயசிங்க ஆராச்சி பரிந்துரைக்கப்பட்ட பெயர்களில் இருந்து தெரிவு செய்யப்படுவார் எனவும், அவரே சிரேஷ்டத்துவத்தின் அடிப்படையில் முன்னிலையில் இருக்கிறார் எனவும் தெரியவருகின்றது. 1997ஆம் ஆண்டு உப பொலிஸ் அதிகாரியாக பொலிஸ் சேவையில் இணைந்த அவர், 2017ஆம் ஆண்டு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியாக பதவி உயர்வுபெற்றார். (ம-44)


## பணிநிலை வேண்டுகை

நேரச்சு இயந்திர இயக்குனர் (ஆண்)
Offset Machine Minder

கணினி பக்க வழவமைப்பாளர் (ஆண்/பெண்)
Graphics Designer

22.09.2020 - 25.09.2020 வரை
காலை 10.00 மணி - 2.00 மணி வரை நேர்முகத்தேர்வு நடைபெறும்.
அச்சக அனுபவமுள்ளவர்கள் மட்டும் நேரில் வரவும்

- அச்சு வேலைகள் பழக விரும்பும் ஆண்/பெண் இருபாலரும் நேரில் வரவும்
(3km சுற்று வட்டாரம் / யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்டோர் விரும்பத்தக்கது)
- வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களிற்கு தங்குமிட வசதியும் உண்டு (ஆண்கள்)

கரிகணன்
வடக்கின் அச்சகதாரர்

இல. 672B, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : +94 21 222 2717/ 8

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## குற்றம் சுமத்தவும் தகுதி வேண்டும்

வௌவால் கூட்டமொன்று தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்தது. அப்போது கீழே சில மனிதர்கள் அந்த வழியைக் கடந்து கொண்டிருந்தனர். அதைக்கண்ட ஒரு சின்ன வௌவாலுக்கு வந்தது சந்தேகம். தாய் வௌவாலைப் பார்த்து இப்படிக் கேட்டது. 'அம்மா! எப்படி இந்த மனிதர்கள் எல்லோரும் தலைகீழாக நடக்கின்றனர்?'. தாய் வௌவால் 'அதுதான் எனக்கும் தெரியவில்லை' என்று பதில் சொன்னதாம்.

தலைகீழாகத் தொங்குவதென்பது வௌவாலின் இயல்பு. அதற்கு நேராக நடக்கும் எல்லோருமே தலைகீழாக நடப்பதுபோலவே இருக்கும். ஆனால் உண்மையில் தலைகீழாக இருப்பது வௌவால் மட்டுமே. இப்படி வௌவால்த்தனமாக கருத்தொன்றை சொல்லியிருக்கின்றார் அமைச்சர் டக்ளஸ்.

'திலீபன் ஒரு தியாகி அல்ல. அவர் ஒரு கொலைகாரர்' என்று திலீபனை நினைவேந்துவதை கொச்சைப்படுத்தும் வகையில் அமைச்சர் டக்ளஸ் ஊடகப் பேட்டியொன்றில் சொல்லியிருக்கின்றார். திலீபனின் தியாகமும் அகிம்சையில் அவர் கொண்ட பற்றும், தான் கையில் எடுத்த அகிம்சைப் போரை இடைநடுவில் கைவிடாமல் உயிரைக் கொடுத்த அவரது ஓர்மமும் உலகே அறியும். அப்படிப்பட்ட திலீபன் மீது கொலைகாரப் பட்டம் சுமத்தும் அமைச்சர் டக்ளஸின் சீத்துவத்தையும் இந்த உலகு நன்றாக அறியும்.

யாழ். குடாநாடு படைத்தரப்பின் கட்டுப்பாட்டின் கீழ் வந்த பின்னர் இங்கு ஆயிரக்கணக்கான இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர். அப்பாவிகள் பலர் பட்டப்பகலில் சுட்டுக்கொல்லப்பட்டனர். இப்படியான ஈனத்தனமான, கொடூரமான கொலைகளை செய்த கொலைகாரர்கள் யாரென்பது மக்களுக்கும் உலகத்துக்கும் மிக நன்றாகவே தெரியும். கடந்த காலங்களில் அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் முன்னாக பாதிக்கப்பட்ட மக்கள் வெளிப்படையாகவே தங்களுடைய இன்னல்களுக்குக் காரணம் யாரென்பதை தெரிவித்திருந்தனர். இதனை அந்த ஆணைக்குழுக்களின் அறிக்கைகளில் இன்னமும் காணலாம்.

மிக முக்கியமாக 'எங்களுடைய பிள்ளைகளைக் கடத்தியது ஈ.பி.டி.பியே' என்று டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான அமைப்பு மீது மக்கள் துணிந்து சுட்டுவிரலை நீட்டியிருந்தனர். ஓரிருவர் சொல்லியிருந்தால் அதனை ஓர் அமைப்பு மீதான அவதூறு என்று புறக்கணித்து விடலாம். ஆனால் கண்ணீரோடு நூற்றுக்கணக்கான உறவுகள் சொல்வதை அப்படி இலேசாகத் தட்டிக்கழித்துவிட முடியாது. மக்களின் கோபத்துக்கும் சாபத்துக்கும் ஆளான டக்ளஸ் இப்போது அறப்போரில் ஆகுதியாகிய திலீபன் மீது கொலைகாரர் என்ற சேற்றை வாரி இறைக்க முனைந்திருக்கின்றார். ஆனால் அது மல்லாக்கப்படுத்திருந்தபடி துப்பிய எச்சில்போல அவரையே திருப்பி அவமானத்தின் குழிக்குள் தள்ளியிருக்கின்றது. சமூக வலைத்தளங்கள் எங்கும் கடந்த சில வருடங்களாக ஓய்ந்து போயிருந்த 'டக்ளஸ் எதிர்ப்பலை' மீண்டும் வலுவாக வீச ஆரம்பித்துள்ளது.

யாரை யார் குற்றம் சுமத்துவதென்ற ஒரு தராதரம் இருக்கின்றது. மாறாக கண்ணாடி வீட்டுக்குள் இருந்துகொண்டு கண்ணை மூடிக்கொண்டு யார் மீதும் கல்லை வீச நினைத்தால் இப்படித்தான் வாங்கிக் கட்டவேண்டியிருக்கும். புலிகள் இருக்கும் போதும் அவர்களை எதிர்த்து அரசியல் செய்து பழக்கப்பட்ட ஒருவர் புலிகளின் காலத்துக்குப் பிறகும் புலிகளை வைத்தே அரசியல் செய்யவேண்டிய வங்குரோத்து நிலையில்தான் இன்னமும் இருக்கின்றார் என்பது பரிதாபத்துக்குரிய ஒன்றுதான்.

# சட்டவிரோத கட்டுமானங்களை அகற்றும் விடயத்தில் குழப்பம்!

### மன்னார் நகர சபையில் நேற்று அமைதியின்மை

மன்னார், செப்.22

மன்னார் பஸார் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் நகர சபையின் அனுமதி இன்றிமேலதிகமாகக் கட்டுமானங்களை அகற்றுவது என்ற நகர சபையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் எழுந்த பிரச்சினை காரணமாக நகர சபை அமர்வில் அமைதியின்மை ஏற்பட்டது.

மன்னார் நகரசபையின் 31ஆவது அமர்வு நேற்றுத் திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் நகர சபையின் முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தலைமையில் ஆரம்பமானது.

மன்னார் பகுதியில் மன்னார் நகர சபைக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள் சிலவற்றில் மேலதிகமாக குறித்த வர்த்தக நிலையங்களை நடத்துபவர்கள் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டுள்ளனர். அவற்றை அகற்றுவது என்று கடந்த சபை அமர்வில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் அதை நடைமுறைப்படுத்துவதில் நகர சபைத் தவிசாளர் மற்றும் செயலாளர் பின்னிற்கின்றனர் என்று சபையின் உறுப்பினர்கள் சிலர் குற்றஞ்சாட்டினர்.

அந்தக் கட்டுமானங்களை இடிப்பது தொடர்பாக நகர சபைத் தவிசாளர் உறுப்பினர்களுக்கு கடிதம் அனுப்பியிருந்தபோதும் சபைத் தவிசாளரும், செயலாளரும் சம்பவ நேரம் அங்கு வரவில்லை என்று அவர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்குப் பதிலளித்த நகரசபையின் தலைவர் தான் அங்கு சமூகம் அளிக்க வேண்டியதில்லை எனவும் அதற்கான உரிய ஏற்பாடுகளை செய்து பார்வையிட்டு உறுப்பினர் ஒருவர் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்தார் என்றும் தெரிவித்தார்.

நீண்ட நேர அமைதியின்மைக்கு பிறகு சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கடைகளை அகற்றுவது என தீர்மானிக்கப்பட்டது. (எ56)



### வவுனியாவில் கடும் காற்று;

## மரம் முறிந்து வீழ்ந்ததால் மின்சாரம் துண்டிப்பு

வவுனியா,செப்.22

வவுனியாவில் வீசிய கடும் காற்றால், வவுனியா ஏ-9 வீதியில் நீதிமன்றத்துக்கு அருகாமையில் நின்ற பெரிய மரம் ஒன்று நேற்று முறிந்து வீழ்ந்ததில் மின்சாரம் தடைப்பட்டுள்ளது.

வவுனியா வீதி அபிவிருத்தி நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்துக்கு முன்பாக வீதியோரத்தில் நின்ற பெரிய முதிரைமரமே இவ்வாறு அடியோடு சரிந்து வீழ்ந்தது. இதனால் மின்சாரக் கம்பங்கள் உடைந்து மின்சாரம் தடைப்பட்டதோடு, நீர் விநியோகமும் பகுதியளவில் பாதிக்கப்பட்டது.

அத்துடன் நீதிமன்ற அலுவலகத்துக்கு செல்லும் பிரதான பாதையும் தடைப்பட்டது.

கடந்த சில நாள்களாக வவுனியாவில் கடும் வெப்பமான காலநிலை நிலவி வந்ததுடன், தற்போது மாலை வேளைகளில் அதிக காற்றுடனான காலநிலை காணப்படுகின்றது. சம்பவ இடத்துக்கு விரைந்த மின்சார சபையினர் மின்சார இணைப்புக்களைச் சீர்செய்யும் பணிகளில் ஈடுபட்டனர்

(ஐ-110)

## மீண்டும் மின்தடை!

கொழும்பு, செப். 22

அண்மையில் இலங்கை முழுவதும் ஏற்பட்டதைப் போன்று மீண்டும் மின் தடை ஏற்படக்கூடும் என இலங்கை மின்சார சபையின் பொதுமேலாளரினால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மின்சார சபையின் பிரதி பொதுமேலாளர் சுஜீவ அபயவிக்ரம இது தொடர்பில் கடிதம் மூலம் மின்சார சபைக்கு அறிவித்துள்ளார். தேசிய மின்சார கட்டமைப்பில் உள்ள ஒழுங்கற்ற திட்டம் காரணமாக எதிர்வரும் நாள்களில் ஏற்படவுள்ள 'முழுமையான மின் தடையை தடுக்க முடியாது. மின்சார சபை கட்டமைப்பை உரிய முறையில் திட்ட மிட்டிருந்தால் சிறு தவறு ஏற்பட்டாலும் கட்டமைப்பு முழுமையாக செயலிழக்காது.

இந்த விடயத்தை சரிப்படுத்தவில்லை என்றால் எதிர்வரும் காலங்களில் நாடு மின் தடைக்கு முகம் கொடுக்க நேரிடும் என்று அவர் தனது எச்சரிக்கைக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். (ம-இ)

## பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, செப். 21

கண்டியில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் நேற்று அடையாளப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். காலை 8 மணி முதல் நண்பகல் வரை இந்தப்பணிப்புறக்கணிப்பு இடம்பெற்றது. கண்டி மாவட்டத்தில் உள்ள மெனிகின்னா மருத்துவமனையின் தலைமை மருத்துவ அதிகாரி மீது பிராந்திய அரசியல்வாதி ஒருவர் தாக்குதல் நடத்தினார் என்று குற்றம் சாட்டியே இந்தப் பணிப்புறக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டது.

(ம-இ)

# ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை

கொழும்பு, செப். 22

முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் பேர்ப்பச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் ஆகியோருக்கு எதிராகக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் நேற்று திங்கட்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இந்த குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கொள்ளுப்பிட்டியில் ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பை இலஞ்சமாக குத்தகைக்கு எடுத்தமை உட்பட 6 குற்றச்சாட்டுகளில் கீழ் இந்தக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-இ)

# மக்களும் இணைந்து செயற்பட்டால் சமுதாயத்தைச் சீர்திருத்த முடியும்

## மன்னார் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவிப்பு



மன்னார், செப்.22

**பொதுமக்கள் பொலிஸாருக்கு ஒத்துழைப்பை வழங்கும்போது, பொலிஸாரும் சமூதாய சீர்திருத்த விடயத்தில் தீவிரமாகச் செயல்படக்கூடியதாக இருக்கும் என்று மன்னார் சிரேஷ்ட பொலிஸ் பொறுப்பதிகாரி பண்டுல்ல வீரசிங்க தெரிவித்தார்.**

மன்னார் எருக்கலம்பிட்டியில் போதைக்கு அடிமையானவர்களுக்கான புனர்வாழ்வு நிலையத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்:

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இன்று இந்த நாட்டில் எல்லா இடங்களிலும் போதைப் பொருள் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டி வருகின்றது. இதனால் சமுதாய சீர்கேடு நிலவி வருவதை நாங்கள் அவதானித்து வருகின்றோம். கடந்த ஐந்து வருடங்கள் பின்னோக்கிப் பார்க்கின்றபோது வருடாந்தம் குறைந்தது 70 ஆயிரம் பேர் போதைப் பொருள்களுக்கு அடிமையாகினர் என்று பொலிஸார் கைது செய்தனர்.

இன்று இந்தப் போதைப் பொருள் பாவனை அதிகமான இளைஞர்களைத் தாக்கி வருகின்றது. நாங்கள் அவதானிக்கின்றபோது இந்தப் போதைப் பொருள் விற்பனையாளர்கள் தங்கள் வாழ்வில் முன்னேற்றம் கண்ட சரித்திரம் இல்லை. இந்தப் புதிய அரசின் முக்கிய செயற்றிட்டம் போதைப் பொருள்களைத் தடைசெய்வதாகும். இதற்காக அனைத்துப் படைகளும் செயல்பட்டு வருகின்றன. இந்தக் கிராம மக்களும் ஒன்றிணைந்தவர்களாக இச் செயற்றிட்டத்தில் இறங்கியிருப்பது உண்மையில் பெருமைக்குரிய விடயமாகும். இதற்கு எங்கள் ஒத்துழைப்புக் கட்டாயம் இருக்கும்.

நேர்மையாக, உண்மையாகச் செயல்படுகின்ற பொலிஸார் பலர் இருக்கின்றார்கள். அதேவேளையில் நேர்மையற்ற சிலரும் இருக்கின்றார்கள். மன்னாரைப் பொறுத்தமட்டில் சிறந்த நேர்மையுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருக்கின்றார்கள். ஆகவே பொது மக்களாகிய நீங்களும் எங்களுடன் இணைந்து இவ்வாறான செயற்றிட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும்போது நாங்களும் சமூதாய சீர்திருத்த விடயத்தில் தீவிரமாகச் செயல்படக்கூடியதாக இருக்கும். - என்றார். (ஐ-60)



# ‘மௌன அலைகள்’ நூல் வெளியீடு

வவுனியா,செப்.22

நோர்வே விஜேந்திரன் எழுதிய ‘மௌன அலைகள்’ நில, புல உளவியற் பிரச்சினைகள் பற்றிய நூலின் வெளியீட்டு விழா வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வவுனியாவில் அமைந்துள்ள சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வவுனியா பிரதேச செயலர் க.கமலதாசன் கலந்துகொண்டார்.

ஆசியுரையை ஈழத்தின் புகழ்பெற்ற சொற்பொழிவாளர் தமிழருவி த.சிவகுமாரன் வழங்கினார். வரவேற்புரையை பெண் படைப்பாளி பிரபாகரன் வேதிகா வழங்கினார்.

தலைமையுரையைத் தொடர்ந்து நூலின் வெளியீட்டுரையை யோ.புரட்சி நிகழ்த்தினார்.

நிகழ்வின் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட வவுனியா பிரதேச செயலர் க.கமலதாசன் நூலை வெளியிட்டு வைக்க, முதற்பிரதியை செந்தில்நாதன் நற்பணி மன்றத் தலைவர் செந்தில்நாதன் மயூரன் பெற்றுக்கொண்டார். (ஐ-159)




# பஸ் நிலைய பலகையில் சிங்கள எழுத்துப் பிழை;

## படையினர் விளக்கம் கோரியதால் திருத்தம்

சாவகச்சேரி,செப்.22

சாவகச்சேரி நகரசபையால், சாவகச்சேரி பஸ் நிலையத்தில் காட்சிப்படுத்தப்பட்ட பெயர்ப் பலகையில் காணப்பட்ட சிங்கள பெயரில், எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன என்றும் அதற்கான விளக்கம் படையினரால் கோரப்பட்டவுடன் அவை திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

பெயர்ப் பலகை இரண்டு வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்டிருந்தபோதும், இரண்டு வருடங்களின் பின்னர் பிழை கண்டுபிடிக்கப்பட்டு, விளக்கம் கோரப்பட்டுள்ளது.

தேசிய மொழியை மூன்றாம் இடத்தில் எழுதப்பட்டது குறித்தும் படையினர் விளக்கம் கோரியுள்ளனர்.

சாவகச்சேரி பஸ் நிலையத்தில் கடந்த 2018 ஆண்டு இந்தப் பெயர்ப் பலகை வைக்கப்பட்டது. இது தொடர்பாக அண்மையில் படையினர் மற்றும் பொலிஸார். நகரசபைக்குச் சென்று சிங்கள மொழியில் காணப்பட்ட எழுத்துப் பிழை பற்றித் தெரிவித்தனர். தற்போது பொலிஸார், மற்றும் படையினரின் உயர்மட்டங்களிலிருந்து அதற்கான விளக்கங்கள் கோரப்பட்டுள்ளன. இதனையடுத்து அந்த எழுத்துப் பிழை திருத்தப்பட்டுள்ளது. (ஐ-9)

# 16 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள்

கைதடி,செப்.22

கைதடி தெற்கு கிராம அலுவலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 16 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்று முற்பகல் கிராம அலுவலர் செல்வி நியூரிகா தலைமையில் நடைபெற்றது.

ஆஸ்திரேலியா அரசாங்கத்தின் அனுசரணையில் ஐ.நா பெண்கள் அமைப்பின் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர் சி.துசிபன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.அனுராகன், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் இ. ஜானகி மற்றும் பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-159)





# ஆசிரியர்களுக்கான சேவைநலன் பாராட்டு

கைதடி,செப்.22

கைதடி முத்துக்குமார சுவாமி மகா வித்தியாலயத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற ஆசிரியர்களுக்கான சேவைநலன் பாராட்டு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை அதிபர் தா.கணேசபாலேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

கணித பாட ஆசிரியர் திருமதி தனலட்சுமி அம்மா சிவகுமாரசர்மா, விஞ்ஞான பாட ஆசிரியர் திருமதி சிவசரணநாதன்சிவானந்தாதேவி ஆகியோருக்கான சேவைநலன் பாராட்டு நிகழ்வே நடைபெற்றது

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ரி.எடிசன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்

சேவைநலன் பெறுவோரை பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்து, வாழ்த்து மடல் வழங்கி பாடசாலை சமூகத்தினர் கௌரவித்தனர். (ஐ-159)

# பதவிக் காலம் முடியமுன்னே பதவியைத் துறந்த உறுப்பினர்

வவுனியா,செப்.22

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர் ஒருவர் தனது பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னரே தானாக முன்வந்து உறுப்பினர் பதவியில் இருந்து விலகி, மற்றொரு வட்டாரத்தில் தேர்தலில் சொற்ப வாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைந்த அதே கட்சியைச் சேர்ந்த ஒருவருக்கு உறுப்பினராகும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்,

கடந்த 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் சாஸ்திரிகூழாங்குளம் வட்டாரத்தில் தமிழ் அரசுக் கட்சியின் மூலம் போட்டியிட்டு வெற்றி பெற்ற மருத்துவர் ப. சத்தியநாதன், பிரதேச சபையின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு அதே கட்சியின் சார்பில் மருக்காரம்பளை வட்டாரத்தில் போட்டியிட்டு சொற்ப வாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைந்த பெ. இராமகிருஷ்ணனை உறுப்பினராகத் தெரிவு செய்யும் நோக்கில் தனது பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னரே பதவியைத் துறந்துள்ளார்.

அவர் தனது பதவி விலகல் கடிதத்தை கட்சித் தலைமை ஊடாக தேர்தல்கள் திணைக்களத்துக்கு அனுப்பியதைத் தொடர்ந்து கட்சியால் சிபார்சு செய்யப்பட்ட பெ. இராமகிருஷ்ணன் புதிய உறுப்பினராகப் பதவியேற்றுக்கொண்டார். (ஐ-110)

## சந்தேகநபருக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி,செப். 22

ஹெரோயின் போதைப் பவுடர் வைத்திருந்த சந்தேகநபரை விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றால் உத்தரவிடப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை கொடிகாமம் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய நபரை பொலிஸார் சோதனையிட்டனர்.

அவர் ஹெரோயின் போதைப் பவுடரை தன்வசம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் கடந்த சனிக்கிழமை நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது ஒக்ரோபர் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஐ -9)

## மருத்துவ முகாம்

முல்லைத்தீவு,செப்.22

முல்லைத்தீவு மாவட்ட செயலக அலுவலர்களுக்கான தொற்றா நோய்களுக்கான மருத்துவ முகாம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு மாவட்ட செயலக புதிய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட பிரதேச மருத்துவமனையால் இந்த மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மருத்துவ முகாமில் குருதி மற்றும் சீனி பரிசோதனைகள், உடற்திணிவு சுட்டி, வயிற்று பருமன் மற்றும் குருதி அழுத்தம் ஆகிய மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பரிசோதனைகளுக்கு வருவோர் ஆகக் குறைந்தது 12மணித்தியாலம் நீராகாரம் ஏதும் அருந்தாது கலந்து கொண்டு, பயன்பெறுமாறு பிரதேச மருத்துவமனை மருத்துவ அதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ-222)

## வகுப்புகள் பிற்போடல்

கொடிகாமம்,செப்.22

தர்மாசிரியர் பரீட்சை எதிர்வரும் 26,27 ஆம் திகதி மற்றும் ஒக்ரோபர் 3 ஆம் திகதி ஆகிய நள்களில் நடைபெறவிருப்பதால் அன்றைய ஆன்மீக பிரசாரகர் டிப்ளோமா வகுப்புகள் நடைபெறமாட்டாது.

அவ் வகுப்புகள் ஒக்ரோபர் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறுமென இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஐ-159)

## காலபோகக் கூட்டம்

சாவகச்சேரி,செப்.22

சாவகச்சேரி கமக்கார அமைப்புக்கு உட்பட்ட 2020 /2021 நெற் செய்கைக்கான காலபோகக் கூட்டம் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் நடைபெற்று வருகின்றது.


ஜே/319 மீசாலை மேற்கு பிரிவுக்கு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு வரணி வடக்கு விநாயகர் சனசமூக நிலையத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (ஐ-159)

# கிளாலியில் மணல் அகழ்வு; கடல் நீர் உட்புகும் அபாயம்

## உடன் நடவடிக்கை வேண்டும் என மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி,செப்.22

**கிளிநொச்சி, கிளாலிப் பகுதியில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் மணல் அகழ்வு காரணமாக கடல் நீர் விவசாய நிலங்களை நோக்கி உள்நுழையும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**



இது தொடர்பில் அப்பகுதி மக்கள் கருத்து தெரிவித்ததாவது; கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராமமே கிளாலி. அங்கு மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டதிலிருந்து தொடர்சியாக அனுமதிகள் இன்றி மணல் அகழப்பட்டு யாழ்ப்பாண மாவட்டத்துக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இது தொடர்பாக பொலிஸார் மற்றும் கனியவளப் பிரிவினர் நடவடிக்கைகள் எடுத்தும் அதனை நிறுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. இந்த மணல் அகழ்வுக்கு எதிராகப் பல ஆர்ப்பாட்டங்கள் கிளாலியில் முன்னெடுக்கப்பட்டன. தனிபர் ஒருவர் கூட கட்டடம் ஒன்றின் கூரை மீது ஏறி ஆர்ப்பாட்டம் செய்தார். எனினும் அதிகாரிகளின் வாக்குறுதிகளை அடுத்து அவர் போராட்டத்தைக் கைவிட்டிருந்தார். மணல் அகழ்வுக்கு எதிராகப் பேசியவர்கள் தாக்கப்பட்டனர். அவர்கள் மருத்துவமனையில் நீண்ட நாள்கள் சிகிச்சை பெற்றுத் திரும்பியிருந்தனர். இவ்வாறான சூழ்நிலையில் தற்போது மீளவும் மணல் அகழ்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயம் மேற்கொள்கின்ற நிலங்கள் எல்லாம் உவர்த்தன்மையாக மாறி வருகின்றன. விளைச்சல்கள் குறைவடைந்துள்ளன. குடிதண்ணீர் கூட மாற்றம் அடைந்து வருகின்றது. கடல் நீர் கிராமத்துக்கு வராது காணப்பட்ட அணையையும், மணல் கொள்ளையர்கள் விட்டு வைக்கவில்லை. இதனால் தற்போது கடல் நீர் கிராமத்துக்குள் நுழையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே இதனை உடன் கட்டுப்படுத்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். (ஐ-6)

## பண்பாட்டு பெருவிழா

முல்லைத்தீவு, செப். 22

மாந்தை கிழக்கு பிரதேசெயலக பண்பாட்டுப் பெருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள்திணைக்களம், கலாசார திணைக்களம் ஆகிய வற்றின் அனுசரணையுடன் மாந்தை கிழக்கு பிரதேச கலாசார பேரவையால் நிகழ்வு நடைபெறவுள்ளது.

பிரதேச செயலரும், பிரதேச கலாசார பேரவையின் தலைவருமான செல்வி ரஞ்சனா நவரத்தினம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

மாணவர்கள், பிரதேச செயலக அலுவலர்களின் கலைநிகழ்வுகளும், புலவர் வள்ளுவதாசன் எழுதிய நூல்கள் இரண்டும், சொல்லுக் குறுதி நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளன. (ஐ -9)

# நெற் செய்கை ஆரம்பம்; கால்நடைகளைக் கட்டவும்

சாவகச்சேரி,செப்.22

தென்மராட்சி தெற்கு தனங்களப்பு கமக்கார அமைப்புக்குட்பட்ட பகுதிகளில் காலபோக நெற்செய்கை ஆரம்பித்துள்ள நிலையில் கால்நடைகளை கட்டி வளர்க்குமாறு அமைப்பின் தலைவர் வே. பாலசுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

வயல்களில் காலபோக நெற்செய்கை விதைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் நேற்றுமுன்தினம் தொடக்கம் 2021மே மாதம் வரை கால்நடைகளை. கட்டி வளர்க்குமாறும், பயிர்களைச் சேதமாக்கும் கால்நடைகள் பிடிக்கப்பட்டு ஏலத்தில் விற்பனை செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி தெற்கு பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை அறுவடையின் பின்னர் சிறு தானியப் பயிர்கள் பயிரிடப்படுகின்றமையால் அவற்றின் அறுவடை முடியும் வரை கால்நடைகளை கட்டி வளர்க்குமாறும் அறிவித்துள்ளார். (ஐ-9)

# புதிய ஆலயம் திறப்பு

கொடிகாமம்,செப் .22

மீசாலை வடக்கு வேம்பிராய் சந்தியில் இரட்சணிய சேனை இல்ல வளாகத்தில் அமைக்கப்பட்ட இரட்சணிய சேனை ஆலயம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை திறக்கப்பட்டது.



நிகழ்வில் இரட்சணிய சேனையின் மாகாண தளபதி கேணல் சுரேஸ் சாமுவேல்பவர், இரட்சணிய சேனையின் இலங்கையின் முதன்மை செயலாளர் லெப்டினன்ட் கேணல் ஸ்ரிவன், மெலின்ஸ் கேணல் திரேசா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வேம்பிராய் சந்தியில் இருந்து மேலைத்தேய இசை வாத்தியத்துடன் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. (ஐ-159)



# தெருவெளி நாடகம்

கிளிநொச்சி,செப்.22

பெண்கள், சிறுவர் பாதுகாப்பு மற்றும் போதைப்பொருள் விழிப்புணர்வு தொடர்பான தெருவெளி நாடகம் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் நடைபெற்றது.

கிளிநொச்சி இராமநாதபுரம் வெற்றிப்பாதை சனசமூக நிலைய வளாகத்தில் நேற்றுமுன்தினம் மாலை இந்த தெருவெளி நாடகம் நடைபெற்றது.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ஆர்.பானுஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள், பாலியல் லஞ்சம், பாலியல் துன்புறுத்தல், சிறுவர் பாதுகாப்பு, போதைப்பொருள் பாவனை உள்ளிட்டவற்றிலிருந்து குடும்ப வன்முறை மற்றும் பாலியல்சார் விடயங்களில் மக்கள் செயற்படுகின்றமை தொடர்பில் தெருவெளி நாடகம் ஊடாக இந்த விழிப்புணர்வு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மக்களை தெளிவூட்டும் துண்டறிக்கைகளும் கையளிக்கப்பட்டன. (ஐ-6)

## துயர் பகிர்கின்றோம்



**C.S. ஆறுமுகம்பிள்ளை**
**சிவசுப்பிரமணியம் (சிவா)**

அவர்களின் பிரிவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு இரு விழிநீர் சிந்த
துயர் பகிர்கின்றோம். அவரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்தித்து நிற்கின்றோம்.

குமாரி சங்கரி கணபதிப்பிள்ளை குடும்பம்
குமாரி சங்கரி இரத்தினம் குடும்பம்

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்



**வினாசித்தம்பி**
**காசிலிங்கம்**
(முன்னாள் பங்காளர்
No:1, மதுபானசாலை)

எங்கள் ஆருயிர் அப்பாவே
ஆண்டுகள் எட்டு சென்றாலும்
ஆறாது எம் துயரம்
ஆண்டவன் அடியில் இருந்து
எங்களை ஆசீர்வதியும் அப்பா!

64/4.A, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர்**
**பொன்னம்பலம் நாகரட்ணம்**

நீங்கள் மண்ணைவிட்டு மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் எங்கள் மனதில்
என்றும் வாழ்ந்துகொண்டு இருக்கிறீர்கள்.

காரைநகர்.

அன்புடன்
பேரமக்கள்.

## மரண அறிவித்தல்



தோற்றம்
28
07
1937

மறைவு
21
09
2020

**செல்வராசா தவமணி**

56. மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம் எனும் முகவரியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வராசா தவமணி நேற்று (21.09.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - ராசம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை செல்வராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அன்னலட்சுமி, செல்லத்துரை ஆகியோரின் சகோதரியும் சுசீலா (லண்டன்), ஜெகநாதன் (சுவிஸ்), அஜந்தா, சுதாகரன் (லண்டன்), சுகந்தி (லண்டன்), பிரபாகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு தாயாரும், காலஞ்சென்ற தியாகராசா, கலைச்செல்வி (சுவிஸ்), தனபாலசிங்கம், சாந்தம் (லண்டன்), சுரேஸ்குமார் (லண்டன்), சங்கீதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், துவாரகா, மிதிலா, கோகில்ராம், துஷாரகி, கீர்த்தனராம், செந்தூரன், ஜெசிந்தன், செந்துஜா, சனோஜன், சாருஜன், திபுஷன், திபுஷா, ஹரிஷன், ஜீவனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஷியானா, ஸ்ரேயா, கௌதம், தாரிகா, ஷர்வன், ஹர்சிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பேரன்
076 602 8899

தகவல்
குடும்பத்தினர்




கிளிநொச்சி சவாரிச்சங்கத்தின் நெறிப்படுத்தலின்கீழ் புளியம்பொக்கணை கலவெட்டித்திடல் சவாரிப்பிரியர்களால் தில்லைக்கணபதி சவாரி விடந்தையில் நேற்று முன்தினம் மாட்டு வண்டிச் சவாரிப்போட்டி நடைபெற்றது. இதில் 71 சோடி போட்டி மாடுகள் ஐந்து பிரிவுகளில் பங்கு பற்றின.

(ப-21)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் **ஆண்டி**
**சின்னம்மா**
(பட்டும்பிள்ளை)

நவாலி அந்திரான்
முருகமூர்த்தி கோவிலடியை
சேர்ந்த அன்னார்
58நாள்கள் கால்நடையாக
கதிர்காமம் 11 முறை சென்றவர்.

இன்று (22.09.2020)
செவ்வாய்க்கிழமை
அவரது 31 ஆம் நாள் நினைவு
நடைபெறும்.

தோற்றம்
08.02.1942

மறைவு
23.08.2020

மகள்


## செயலமர்வு



கொடிகாமம், செப்.22

2020 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீசைக்கு தோற்றவுள்ள தரம் 5 மாணவர்களுக்கான செயலமர்வு பளை இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அமரர் சுப்பிரமணியம் நாகேஸ்வரியின் ஞாபகார்த்தமாக இந்த செயலமர்வு நடைபெற்றது.

செயலமர்வில் பளைக் கோட்டத்துக்கு உட்பட்ட 7 பாடசாலைகளைச் சேர்ந்த 116 மாணவர்கள் கலந்துகொண்டனர்.

வளவாளராக மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி ஆசிரியர் த.பிரஜாபதி கலந்துகொண்டார்.

(ஜ-159)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



முத்தாய் : 15.11.1940 வித்தாய் : 23.08.2020

**செல்வராசா சிவலிங்கம்**
(முன்னைநாள் உற்பத்தி முகாமையாளர்-
யாழ் புடைவை நெசவாளர் கூட்டுறவு சங்கம்)

அன்பின் இருப்பிடமாகவும்
பண்பின் பிறப்பிடமாகவும் திகழ்ந்தீர்களே
பாசமுடன் பாங்காய் வளர்த்தெம்மை
பார்ப்போர் புகழ வாழவைத்தீர்களே
உங்கள் புன்சிரிப்பை இனி எப்போ
நாம் காண்போம்
பதைபதைத்து நாம் நிற்க நீங்கள்
பறந்தோடி மறைந்ததென்ன
பரமன் கமலபாதமதில் பசுமையுடன் துயின்றிடவோ

எங்கள் அப்பாவின் பிரிவுச் செய்தி அறிந்து பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் மரணச் சடங்கின்போதும் நேரில் கலந்து கொண்டு எங்கள் துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (22.09.2020) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரை யும் அன்புடன் கேட்டு கொள்கின்றோம்.

செல்வராசா அவனியூ,
அம்மன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும் :
குடும்பத்தினர்.


## 108 சங்காபிசேகம்

சாவகச்சேரி, செப். 22

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை ஞான வைரவர் கோவில் கும்பாபிசேகத்தின் ஓராண்டு நிறைவையொட்டிய 108 சங்காபிசேகம் இன்று காலை 9.00 மணிக்கு இடம்பெறுமென கோவில் பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

(ப-9)

## இன்றைய நாள்

**மேடம்:** குழந்தைகளின் மூலம் அலைச்சல் உண்டாகும். நெருங்கியவர்களிடம் நிறை, குறைகளை அறிந்து கொள்வீர். அநாவசிய கோபதாபங்கள் உள்ள நாள். மருத்துவ செலவுகள் ஏற்படும்.

**இடபம்:** பகை விலகும் நாள். வீடு, பணி மாற்றம் பற்றிச் சிந்திப்பீர்கள். நெருங்கிய ஒருவர் பற்றிய அநாவசிய பயம் ஏற்படும். நண்பர்கள் நிதி விஷயத்தில் உதவுவர்.

**மிதுனம்:** மனைவி வகை உறவுகளுடன் வருத்தங்கள் ஏற்படும். திருமண விஷயமாக நல்ல தகவல் உண்டு. மனக் குழப்பங்கள் தீரும் நாள். செலவுகள் குறையும்.

**கடகம்:** திட்டங்கள் வெற்றியடையும் நாள். சிறிதளவு பண வரவு இருக்கும். யாருக்கும் கருத்துச் சொல்லாமல் இருப்பது நல்லது. சிகிச்சையில் இருப்பவர்கள் குணமடைவார்கள்.

**சிம்மம்:** எவ்வளவு பிரச்சினை இருந்தாலும் தம்பதியர் இடையே யாரையும் மத்யஸ்தத்துக்கு அனுமதிக்க வேண்டாம். தைரியம் கூடும் நாள். எதிலும் கவனம் அவசியமாகும்.

**கன்னி:** அரசாங்க விஷயங்கள் சாதகமாக முடியும். புதிய வேலையில் சேரும் வாய்ப்பு வரும். குழந்தைகளால் செலவுகள் உண்டாகும். வியாபாரம் முன்பைவிடச் சிறிது லாபகரமாக நடக்கும்.

**துலாம்:** வியாபாரிகளின் முயற்சிகள் வெற்றி தரும். பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். பணியாளர்களின் முயற்சியில் இருந்த தடைகள் விலகும். வியாபார முன்னேற்றம் இருக்கும்.

**விருச்சிகம்:** அரசு வழியில் எதிர்பார்த்த உதவிகள் சிறு தாமதத்திற்குப் பிறகு இன்று கிடைக்கும். புகழ் மிக்கவர்கள் உங்களுக்கு உதவுவர். யோகமான நாள்.

**தனுசு:** வியப்பூட்டும் நாள். பணியாளர்கள் புதிய முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். உறவினர்களால் சிறு பிரச்சினைகள் தோன்றும். தொழிலில் இருந்த தேக்க நிலை மாறும்.

**மகரம்:** உடன்பிறப்பின் ஆரோக்கியத்தில் சிறு பாதிப்புத் தோன்றி மறையும். மனதுக்குப் பிடித்தவரின் ஆறுதல் வார்த்தை மகிழ்ச்சி தரும். கடன் பிரச்சினை தீரும்.

**கும்பம்** எதிலும் முழு ஈடுபாட்டுடன் செயல்படுவீர்கள். தம்பதியர் இடையே ஒற்றுமை மீளும். தந்தையின் ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

**மீனம்:** நம்பிய விஷயங்கள் நடைபெறும் நாள். அனுபவசாலிகளின் ஆதரவு கிடைக்கும். பெண்கள் நன்மை செய்வர். வெளிநாட்டிலிருந்து பணம் வரும். பணியாளர்களுக்கு நல்ல செய்தி வரும்.

## மோதலில் ஒருவர் கொலை

மாத்தறை, செப்.22

கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு மாத்தறை அக்குரஸ்ஸ, பிட்டபெத்தர பகுதியில் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட பிரச்சினையின் காரணமாகவே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவத்தில் பலத்த காயமடைந்த 34 வயதுடைய நபர் மாத்தறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். (வ-இ)

## 'வாரிசு'க்கு வரவேற்பு



அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் மகனுக்கு நேற்று அவரது இல்லத்தில் சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டது.

# சிறு, மத்திய தொழில்துறைகளே இலங்கைப் பொருளாதார முதுகெலும்பு

### பிரதமர் மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, செப்.22

சிறு மற்றும் மத்திய தொழில் துறைகளே இன்று எம் நாட்டு பொருளாதாரத்தின் முதுகெலும் பாகக் காணப்படுகின்றன என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.



அம்பாந்தோட்டை மாகம்ருஹுணுபுர சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற 'சிறு மற்றும் நடுத்தர நிறுவன மேம்பாட்டு மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நமது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 52 சதவீதத்திற்கு இத்துறை பங்களிக்கிறது. இது அனைத்து வேலைவாய்ப்புகளிலும் 45 சதவீதம் ஆகும். மேலும், இத்துறை நாட்டின் மொத்த தொழில்முனைவோரின் எண்ணிக்கையில் 75 சதவீதமாகும். நாம் கடந்த குறுகிய காலத்துக்குள் கடன்களுக்கு சலுகை வட்டி விகிதங்களை அறிமுகப்படுத்தி, பணி மூலதனத் தேவைகள் மற்றும் கடன் உத்தரவாதங்கள் மூலம் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை புதுப்பிக்க நடவடிக்கை எடுத்தோம்.

சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் மூலம் மேற்கொள்ளப்படும் உலக ஏற்றுமதியின் சராசரி வீதம் 30-சதவீதமாகும். இருப்பினும், இலங்கையைப் பொறுத்தவரையில் அதில் 5 சதவீதமாகவே உள்ளது. இதை அதிகரிக்க ஓர் அரசாங்கமாக எங்கள் ஆதரவை வெளிப்படுத்த இந்த வாய்ப்பைப் பயன்படுத்த விரும்புகிறேன் எனத் தெரிவித்தார். (வ-இ)



## அரச பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு நீதி அமைச்சர் விஜயம்

கொழும்பு, செப்.22

அரசாங்கப் பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு நீதி அமைச்சர் அலி சப்ரி நேற்றுமுன்தினம் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்

அவர் அங்கு இடம்பெறும் செயற்பாடுகளைப் பார்வையிட்ட பின்னர், ஆய்வு அறிக்கைகள் தாமதமாவதை நிவர்த்திக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தினார். (ற-இ)

## மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதன்படி புதன் காலை 08.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். மாவட்டத்தில்** மடத்துவெளி, இறுப்பிட்டி, கேரதீவு, புங்குடுதீவு அரசடி சந்தி, நடுவுக்குறிச்சி, குறிகட்டுவான், ஆலடி சந்தி, புங்குடுதீவு பிரதேசம், வல்லான், புங்குடுதீவு கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும், மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.

## சமாதானம் வேண்டி அமைதிப் பேரணி

திருகோணமலை, செப்.22

உலக சமாதான தினத்தை முன்னிட்டு அமைதிப் பேரணியும் விழிப்புணர்வுக் கருத்தரங்கும் திருகோணமலையில் நேற்று இடம்பெற்றன.

பன்மைத்துவம் மற்றும் நீதியின் ஆட்சி ஆகிய வற்றை பலப்படுத்துவதன் மூலம் சமய சகவாழ்வை கட்டியெழுப்புதல் எனும் தொனிப் பொருளில் தேசிய சமாதான பேரவையின் அனுசரணையுடன், திருகோணமலை சேவிங் ஹியுமெனிட்டி பவுண்டேசன் அமைப்பின் ஏற்பாட்டில் இவை இடம்பெற்றன.

இதில், திருகோணமலை மாவட்டத்திலுள்ள பௌத்த,இந்து,இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ மதத் தலைவர்கள் பலர் கலந்து கொண்டார்கள்.

திருகோணமலை மணிக்கூட்டு கோபுர வளைவிலிருந்து ஆரம்பமான இந்த சர்வ மத விழிப்புணர்வு பேரணி திருகோணமலை நகர சபை மண்டபத்தைச் சென்றடைந்து நிறைவு பெற்றது. (வ-40)



### மின்சாரப் பாவனையாளர்களின்

# முறைப்பாடுகளை தீர்க்க வந்தது நடமாடும் சேவை

**கொழும்பு, செப். 22**

**மின்சாரத் துறையின் ஒழுங்குறுத்துகை நிறுவனமான இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு, இலங்கை மின்சார சபை, மற்றும் லங்கா பிரைவேட் லிமிட்டெட் (லெகோ) ஆகியவற்றுடன் இணைந்து மின்சார பாவனையாளர்களின் முறைப்பாடுகளை தீர்ப்பதற்காக முதன்முதலாக நாட்டின் மாகாண மட்டத்தில் நடமாடும் சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.**

முதலாவதாக தென்மாகாணத்தில் நடைபெற்ற இந்தச் சேவையில் 500க்கும் மேற்பட்ட மின்சாரப் பாவனையாளர்கள் பங்கேற்று பயனடைந்தனர். இந்த நடமாடும் சேவை அனைத்து மாகாணங்களிலும் நடத்தப்படவுள்ளதோடு மின்சாரப் பாவனையாளர்களின் முறைப்பாடுகளுக்கு தீர்வையோ அல்லது நடைமுறையையோ



வழங்கி, பின்னர், தகவல்கள் தேவைப்படும் பாவனையாளர்களுக்கு ஒழுங்குறுத்துகைக் கருவிகளைப் பகிர்வதற்கு சேவை வழங்குநர்களால் புதிய சேவைகள் அறிமுகப்படுத்தப்படும். மேலும், பிரதேச செயலாளர்களின் அதிகாரத்தின் கீழ் உள்ள வழியனுமதி தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குதல், புதிய மின்சார இணைப்புகளை வழங்குதல் போன்ற பல சேவைகள் இந்த நடமாடும் சேவையால் முன்னெடுக்கப்படுகின்றன. (ம-இ)



# 77 கிலோகிராம் கஞ்சா கிளிநொச்சியில் மீட்பு!

கிளிநொச்சி, செப். 21

கிளிநொச்சி பொலிஸாரால் 77.3 கிலோகிராம் கேரளா கஞ்சா நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்செயலுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். கிளிநொச்சி பொலிஸ் நிலைய மது ஒழிப்புப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கு அமைவாக நேற்று ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றி வளைப்பின்போதே மேற்படி கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பிரதி பொலிஸ்மா அதிபர் சம்பத் குமார லியகேவின் உத்தரவுக்கு அமைவாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிசாந்த சந்திரசேகரவின் கண்காணிப்பில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் புஸ்பகுமார மற்றும் கிளிநொச்சி தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜீவகஸ்த சிறிசேன ஆகியோரின் வழிநடத்தலில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போதே இந்த கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி ஊடாக வேறு பகுதிகளுக்கு கடத்தப்படுவதற்காக எடுத்துவரப்பட்ட சந்தர்ப்பத்திலேயே பொலிஸார் சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது சந்தேகநபர்கள் தப்பியோடியுள்ளனர் எனவும் அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-6)

# மூன்று கட்சிகள் அரசுடன் சங்கமம்

கொழும்பு, செப். 22

மூன்று சிறுபான்மைக் கட்சிகள் அரசுடன் இணைவதற்கு தீர்மானித்துள்ளன.

இதற்கமைவாக ஆளும் கட்சியின் உயர்மட்டத்துடன் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் வெற்றியளித்துள்ள நிலையில் குறித்த மூன்று கட்சிகளும் ஆளும் கட்சியுடன் இணைய உள்ளன. இதன்போது ஆளும் கட்சியில் பெற்றுக்கொள்ளக்கூடிய பதவி நிலைகள் குறித்து இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவாகியுள்ள அந்தக் கட்சிகளின் இரண்டாம் நிலை தலைவர்கள் முதலில் இணைய உள்ளனர். மறுபுறம் 28 இராஜாங்க மற்றும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களிலும் திடீர் மாற்றங்களை மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது.

தற்போதுள்ள அமைச்சுக்களுக்குரிய நிறுவனங்கள் மற்றும் விடய தானங்களிலேயே இந்த மாற்றங்கள் இடம்பெறவுள்ளன. இதன் போது அமைச்சுக்குரிய நிறுவனங்களில் மாற்றங்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுகளில் பெயர்மாற்றங்கள் இடம்பெறலாம் எனக் கூறப்படுகிறது. இந்த மாற்றங்கள் இரு வாரங்களுக்குள் இடம்பெறும் என்றே கூறப்படுகிறது. இந்த நிலையில் ஆளும் கட்சிக்கு ஆதரவு வழங்கவுள்ள குறித்த மூன்று சிறுபான்மைக் கட்சிகளுக்கான பதவிகள் குறித்தும் அரசு அவதானம் செலுத்தியுள்ளது என்று தெரியவருகின்றது. (ம-44)




# உச்சக்கட்டப் பாதுகாப்புடன் கொழும்பில் பிள்ளையான்

கொழும்பு, செப். 22

இன்றைய தினம் நடைபெறவுள்ள நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொள்வதற்காக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் பலத்த பாதுகாப்புடன் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்திரகாந்தன் விசேட அதிரடிப்படையினரின் பலத்த பாதுகாப்புடன் நேற்றைய தினம் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

கடந்த 2005ஆம் ஆண்டு மட்டக்களப்பு மரியாள் தேவாலயத்தில் வைத்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் சுட்டுக்கொல்லப்பட்ட வழக்கில் சிவநேசதுரை சந்திரகாந்தன் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-இ)

# 'ஹோப்' குழுவின் கூட்டம் இன்று!

கொழும்பு, செப். 22

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் 'ஹோப்' எனப்படும் நாடாளுமன்ற பொது முயற்சியாண்மைக்கான செயற்குழுவின் முதலாவது கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இதேவேளை 'ஹோபா' எனப்படும் அரச கணக்குக் குழுவின் முதலாவது கூட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக நாடாளுமன்றத் தொடர்பாடல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, செயற்குழு உறுப்பினர்களின் தலைவர் தெரிவு இடம்பெறவுள்ளதாகவும் நாடாளுமன்றத் தொடர்பாடல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. பொது முயற்சியாண்மைக்கான தெரிவுக்குழு மற்றும் அரச கணக்குகள் தெரிவுக்குழு ஆகியவற்றில் 44 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெயரிடப்பட்டுள்ளனர். (ம-இ)

# ஐ.நாவுக்கான பிரதிநிதியாக மொஹான் பீரிஸ்?

முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக நியமிக்கப்படவுள்ளார் என்று நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

தற்போது ஐ.நாவுக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாகப் பணியாற்றிவரும் ஷேனுகா செனவிரத்ன இலங்கைக்கு மீள அழைக்கப்பட்டுள்ள நிலையில் அவர் ஒக்ரோபர் மாத நடுப்பகுதியில் நாடு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழில்சார் வெளிநாட்டு சேவைப் பணிப்பாளராகப் பணியாற்றி வரும் ஷேனுகா செனவிரத்ன கடந்த ஜூன் மாதத்தில் தனது 60ஆவது வயதைப் பூர்த்தி செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. வெளிநாட்டுச் சேவையினூடாக தொழில்சார் ரீதியில் இராஜதந்திரிகளாக பணியாற்றி வருபவர்களை 60 வயதுடன் ஓய்வுபெறுமாறு வெளிநாட்டு அமைச்சு வலியுறுத்தி வரும்போதும் அரசியல் நியமனங்களின் அடிப்படையில் இராஜதந்திரிகளாகப் பணியாற்றுகின்றவர்கள் 60 வயதைக் கடந்தும் பணியாற்றுவதுடன் புதிதாக நியமனங்களையும் பெற்றுவருகின்றனர் என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களுக்குப் பொறுப்பாக நியமிக்கப்படவுள்ள 8 பிரமுகர்கள் 18 பேரைக் கொண்ட உயர் பதவிகளுக்கான குழுவின் முன்பாக நேர்காணலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இந்தக் குழுவை அண்மையில் சபாநாயகர் நியமித்திருந்தார். இந்தக் குழு வெளிநாட்டுத் தூதுவர் பதவிக்குப் பிரேரிக்கப்பட்டவர்களின் தகைமைகளை விவரமாக ஆராய்ந்து அவர்கள் பொருத்தமானவர்களா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்கும்.

இந்த 8 பிரமுகர்களின் பெயர்கள் பட்டியலில் முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸின் பெயர் முன்னதாக இடம்பெறவில்லை. அவரது பெயர் பின்னரே பரிந்துரைக்கப்பட்டது. இதனால் மொஹான் பீரிஸ் நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக நியமிக்கப்படவுள்ளார் என்று கருதப்படுகின்றது. (ம-இ)

மு.வே.யோ.வாஞ்சிநாதன்

இன்று அதிகாலையிலே நிரஞ்சன் குழுவினர் கொட்டகை போடும் வேலையை ஆரம்பித்து விட்டனர். முதல் நாள் இலட்சக்கணக்கான மக்கள் வந்திருந்தமையால் போடப்பட்டிருந்த கொட்டகைகள் எல்லாம் சனக்கூட்டத்தினால் நிரம்பி வழிந்தன. ஏராளமானோர் சுடுவெயிலில் கால்கடுக்க நிற்கவேண்டி ஏற்பட்டதால் நல்லூர் கோவில் மைதானம் முழுவதிலும் படங்குகளினால் கொட்டகை போடத் தொடங்கியிருந்தார்கள்.

உண்ணாவிரதம் ஆரம்பிக்கும்போது இத்தனை சனக்கூட்டம் வருமென யாருமே எதிர்பார்க்கவில்லை. இலங்கையில் மட்டுமன்றி, இந்தியா மற்றும் பல வெளிநாடுகளில் கூட திலீபனின் தியாகப் பயணம் பற்றியே மக்களில் பெரும்பாலானோர் பேசிக் கொண்டிருக்கின்றனர் என, பத்திரிகைகளில் போட்டிருந்தார்கள்.

அத்துடன் தமிழீழத்தின் பல பாகங்களிலும் பரவலாக மக்கள் அடையாள உண்ணாவிரதங்களை மேற்கொண்டு தம் எழுச்சியைக் காட்டிக் கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாநகரில் 'மதன்' என்ற இளம் தளபதி ஒருவர், மக்களின் ஆதரவுடன் தன் போராட்டத்தைத் திலீபனின் வழியில் இன்னும் இரண்டு நாள்களில் ஆரம்பிக்கவிருப்பதாக என்னிடம் மாத்தயா கூறினார். இந்த மதனைத் தெரியாதவர்களே மட்டக்களப்பில் இல்லை. 1985 ஆம் ஆண்டு நான் இந்தியாவில் இருந்தபோது மதன் தமிழீழத்துக்குச் சென்றார். பல போர்க்களங்களைத் தன் இளம் வயதில் சந்தித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத் தளபதியாக இருந்த கருணாவுடன் சேர்ந்து திருகோணமலையிலுள்ள குச்சவெளிப் பொலிஸ் நிலையத்தைத் தகர்த்தவர்களுள், இந்த மதனும் ஒருவர். இதே குச்சவெளிப் பொலிஸ் நிலையத் தாக்குதல்களில் முக்கிய பங்கெடுத்தவர்கள் என் மனதில் மட்டுமன்றி தமிழ் மக்களின் மனங்களிலும் நீங்காத இடம் பிடித்திருக்கின்றார்கள். அவர்கள் வேறு யாருமல்லர்.....

லெப்டினன்ட் கேணல் சந்தோஷம், லெப்டினன்ட் கேணல் குமரப்பா, லெப்டினன்ட் கேணல் புலேந்திரன் ஆகியோர்தான்.

தமிழீழத்தின் முல்லைத்தீவு மாவட்டத்திலே திருச்செல்வம், என்ற போராளியும், அவருடன் சேர்ந்து பல பொதுமக்களும், உண்ணாவிரதப் போராட்டத்தை நாளை தொடங்கவிருக்கின்றனர் எனச் செய்திகள் வெளிவந்தன.

தமிழீழம் எங்குமே அஹிம்சைப் போர் தீப்பிழம்பாக எரிந்து கொண்டிருக்கிறது. திலீபன் ஓர் மகத்தான மனிதன் தான். இல்லையென்றால் அவன் வழியிலே இத்தனை மக்கள் சக்தியா.....?

வல்வெட்டித்துறையிலே திலீபனுக்கு ஆதரவாக உண்ணாவிரதம் இருக்கும் ஐந்து தமிழர்களைத், தலைவர் பிரபாகரன் நேரில் சென்று சந்தித்தபோது எடுக்கப்பட்ட படத்தையும், திலீபனின் படத்தையும், பத்திரிகைகளில் அருகருகே பிரசுரித்திருந்தார்கள்.




"ஈழமுரசு" பத்திரிகையில் திலீபனுக்கு அடுத்த மேடையிலே சாகும் வரை (நீராகாரம் அருந்தாமல்) உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கும் திருமதி நல்லையா, செல்வி.குகசாந்தினி, சிவா துரையப்பா ஆகியோரின் படங்களையும் போட்டிருந்தார்கள். மொத்தத்தில் எல்லாமே திலீபனின் அகிம்சைப் போருக்கு வெற்றி முரசு கொட்டிக் கொண்டிருந்தன. பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகள் மட்டுமன்றி ஒவ்வொரு ஊரிலிருந்தும் பல பொதுசன அமைப்புக்கள் அணியாக வந்து உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்குபற்றுவதோடு திலீபனுக்காக கவிதை வடிவில் ஆயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்களையும் அச்சடித்து விநியோகித்து வந்தன.

இந்த எழுச்சியை, மக்களின் வெள்ளத்தைப் பார்ப்பதற்கு என்றே தினமும் யாழ்ப்பாண நகரத்தைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தன இந்திய சமாதானப் படையின் ஹெலிகொப்டர்கள். புலிகள் ஆயுதப் போராட்டத்தில் மட்டுமல்ல. அஹிம்சைப் போராட்டத்திலும் சாதனை படைக்கும் திறன் பெற்றவர்கள் என்ற பேருண்மை, உலகம் முழுவதும் பரவிக் கொண்டிருந்தது.

திலீபனின் சாதனை உலக அரங்கிலே ஒரு சரித்திரமாகிக் கொண்டிருக்கிறது. உலகிலே முதன் முதலாக ஒரு சொட்டு நீர் கூட அருந்தாமல் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து ஏழு நாள்களை வெற்றிகரமாக முடித்தவர் என்ற பெருமையுடன் அதோ கட்டிலில் துவண்டு வதங்கி, உறங்கிக் கொண்டிருக்கிறார் திலீபன்.

அவரது கண்கள் இரண்டிலும் குழிகள் விழுந்து விட்டன. முகம் சருகைப்போல் காய்ந்து கிடக்கிறது. தலைமயிர்கள் குழம்பிக் கிடக்கின்றன...... வயிறு ஒட்டி விட்டது. நீரின்றி வாடிக்கிடக்கும் ஓர் கொடியினைப் போல் வதங்கிக் கிடக்கின்றார்.

அவரால் விழிகளைத் திறக்க முடியவில்லை. பார்க்க முடியவில்லை.....

பேச முடியவில்லை......

சிரிக்க முடியவில்லை.........

ஆம் ! தூங்க மட்டும்தான் முடிகிறது. இன்னும் எத்தனை நாள்களுக்குத்தான் இந்தக் கோல நிலவு தன் எழிலை இழந்து வாடி வதங்கப் போகிறது?

முரளியின் பொறுப்பிலுள்ள மாணவர் அமைப்பைச் சேர்ந்த மாணவ மாணவிகள் சனக்கூட்டத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

மகளிர் அமைப்பு உறுப்பினர்கள், சனங்களை வழிநடத்திக் கொண்டிருக்கின்றனர். பக்கத்து மேடையிலே நிகழ்ச்சிகள் ஆரம்பமாகி விட்டன. பெரும்பாலானோர் அழுதழுது கவிதை படிக்கின்றார்கள்.

*"சிந்திய குருதியால்*
*சிவந்த தமிழ் மண்ணில்*
*சந்ததி ஒன்று*
*சரித்திரம் படைக்க....*
*முந்திடும் என்பதால்....*
*முளையிலே கிள்ளிட.....*
*சிந்தனை செய்தவர்*
*சிறுநரிக் கூட்டமாய்....*
*'இந்தியப்படையெனும்'*
*பெயருடன் வந்தெம்*
*சந்திரன் போன்ற...*

பார்த்தீபனுடன்
12
நாள்கள்



*திலீபனின் உயிரைப்*
*பறித்திட எண்ணினால்.....*
*பாரிலே புரட்சி.....*
*வெடித்திடும் என்று....*
*வெறியுடன் அவர்களை.....*
*எச்சரிக்கின்றேன் !"*

**தியாகதீபம் திலீபன் நல்லூர் வீதியில் நிகழ்த்திய அகிம்சை வேள்வி பற்றிய நேரடி அனுபவங்கள்**

மேடையிலே முழங்கிக் கொண்டிருந்த இந்தக் கவிதை என் மனத்திலே ஆழமாகப் பதிகிறது. இன்று திலீபனின் உடல் நிலை மிகவும் மோசமாகி விட்டது என்பதை அவரின் வைத்தியக் குறிப்புகள் எடுத்துக் காட்டுகின்றன.

**இரத்த அழுத்தம் - 80/50**
**நாடித் துடிப்பு - 140**
**சுவாசம் - 24**

*- தியாகம் தொடரும்....*

# மறுமலர்ச்சி பூத்திடப்பா....

அண்ணலே.!
கண்ணுக்குள் இன்றும் நீ
எண்ணிலா விம்பமாய் .....
எழுமதியாய்...எழும் சுடராய்...
ஆற்றமுடியாத் துயர் தந்து சென்றவனே...
நேற்றுப் போலுள்ளது நினைவெங்கும்.

தோற்றம் தந்த தாயாக உன்முன்
தோன்றி வெற்றிச் சந்தண
திலகமிட்டாள் ஓடிவந்து ஒரு தாய்.

வேள்வித்தீயில் விறகாக
வெந்ததுன் ஊனுடம்பு...
வேகும் காட்டில் கருகியது
உன் ஆன்மாப் பறவை.
ஆன்மாவின் கதறலை அகத்தீயில் பொசுக்கி
முப்புரம் எரித்த முந்தயவன் போல
குமிண் சிரிப்பால் அந்த
கொடிய வலி பொறுத்தாய்.
அடியவர் போல் மக்கள் தொழுதரற்ற
அகிம்சை தீ வளர்த்தாய்.

உயிரங்கு பசித்தீயில்
உருகுநிலை கண்டு
நல்லூர் முருகனும் உயிருறைந்து
சிறைப்பறவை ஆனான்.
கருகிக் கருகி மக்கள்
மனங்களிலே பூத்தாய்.
கடல் தாண்டி வந்தவரின்
கபடநிலை உரைத்தாய். உன்
ஐந்தம்சக் கோரிக்கை
இன்றுவரை மலரவில்லை.
ஏற்றிய கோரிக்கையை
எடுத்தியம்ப மறுக்கிறார்.

வெந்தணலாய் வேகியவுன்
தியாகச் சூட்டிலே
கோடரிக்காம்புகளோ விறைப்பெடுப்பு....
விருந்தாடல்....
காட்சிப் பொருளாக்கியுன்னை
காட்டுறார் கண்துடைப்பு
ஏற்றமிகு தியாகத்தை
ஏலத்திலே தள்ளுறார்.
நாற்றமிகு மனத்தோராய்
வாய் வீரம் காட்டுறார்.

மக்கள் புரட்சி வெடிக்கும் உன்
மனக் கனவு மலரும் நாள்.....
மந்திகளாய் ஓடுமிந்த
மாய்மாலக் கூட்டங்கள்.

வீரனே!
விலையில்லா உயிரை
அணுவணுவாய்க் கரைத்தவனே!
மக்கள் மனங்களில் ஒரு
மறுமலர்ச்சி பூத்திடப்பா.
வெண்ணுடையில் வருவதெல்லாம்
வேசமென உரைத்திடப்பா
கள்ளக் குணத்தோரின்
கபடத்தை காட்டிடப்பா.

அண்ணலே.!
கண்ணுக்குள் இன்றும் நீ
எண்ணிலா விம்பமாய் .....
எழுமதியாய்...எழும் சுடராய்...

*வன்னிமகள் எஸ்.கே.சஞ்சிகா*

# பயணிகள் சிரமம்

அச்சுவேலி, செப்.22
அச்சுவேலி பேருந்து தரிப்பு நிலையத்தில் பயணிகள் இருக்கைகளை பயன்படுத்த முடியாத நிலை உருவாகியுள்ளது என்று அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
மக்கள் மேலும் தெரிவித்ததாவது;
அச்சுவேலி பேருந்து தரிப்பு நிலையத்தில் உள்ள இருக்கையில் பலரும் ஒன்றுகூடி இருக்கின்றனர். பெரிய சத்தமிட்டு அவர்கள் கதைக்கின்றனர். இதனால் பயணிகள் பேருந்து நிலையத்தில் நிற்பதைத் தவிர்த்து வருகின்றனர். இது தொடர்பாக அச்சுவேலி சிற்றூர்தி சங்கம், மற்றும் வலி.கிழக்கு பிரதேச சபையினர் கவனம்செலுத்த வேண்டும் என்றனர். (ப-422)

# தற்காலிகக் கடைகளை அகற்ற யாழ். மாநகர சபை காலக்கெடு

## 130 குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிப்பு

யாழ்ப்பாணம், செப். 22

**யாழ்ப்பாண பஸ் நிலைய வளாகத்தில், தற்காலிகமாகக் கடைகளை நடத்திவரும் வியாபாரிகளுக்கு, அந்தக் கடைகளை அங்கிருந்து அகற்றுமாறு யாழ்ப்பாணம் மாநகர சபை காலக்கெடு விதித்துள்ளது. யாழ்ப்பாண மாநகர சபையின் இந்த முடிவால், அந்தப் பகுதியில் கடைகளை நடத்தி, அதன் மூலம் தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்தும் 130க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன.**

யாழ்ப்பாணம், பேருந்து நிலைய வளாகத்தில், கடந்த சில வருடங்களாக தற்காலிகக் கடைகள் அமைக்கப்பட்டு, வியாபார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. 67 கடைகள் அவ்வாறு அமைக்கப் பட்டுள்ளன. அந்தக் கடைகளுக்கான அனுமதியை, இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ். சாலையினர் வழங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. கடைகளுக்கான இட வாடகையும் வியாபாரிகளால், மாதாந்தம் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் செலுத்தப்படுகிறது. எனினும், அந்தக் கடைகள், யாழ். மாநகர சபையின் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ளன என்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.
இவ்வாறு சட்டத்துக்கு முரணாக அமைக்கப்பட்டுள்ள கடைகளால் மக்களின் இயல்பு நிலை பாதிக்கப் பட்டுள்ளதோடு, போக்குவரத்துக்கும் இடையூறாக உள்ளது என்று தெரிவித்துள்ள யாழ்ப்பாண மாநகரசபை, யாழ். நகர அபிவிருத்தித் திட்டங்கள் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளமையால், கடைகளை அங்கிருந்து அகற்றுமாறு கட்டளையிட்டுள்ளது. கடைகளை அகற்றுவதற்கான காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாண மாநகர சபையின் இந்த முடிவால், அங்கு வியாபாரங்களில் ஈடுபடும் வர்த்தர்களின் 130 குடும்பங்கள் அதிர்ச்சியடைந்துள்ளன. அபிவிருத்திகள் வரும்போது, இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ். சாலையை அங்கிருந்து இடம்மாற்றும்போது, தற்காலிகக் கடைகளையும் அகற்ற வேண்டும் என்று ஏற்கனவே தெரிவித்திருந்த மாநகரசபை, தற்போது திடீரென காலக்கெடு விதித்தது தொடர்பில் வியாபாரிகள் விசனம் வெளியிட்டுள்ளனர். கடைகளை அகற்றினால், தமது குடும்பங்கள் பட்டினிச் சாவுகளை எதிர்கொள்ள வேண்டி வரும் என அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். யாழ்ப்பாண மாநகர முதல்வர் தமது குடும்ப நிலையைக் கருத்தில்கொண்டு, இந்த முடிவை உடனடியாக ஆராய்ந்து, வியாபாரிகள் பாதிக்காத வகையில் முடிவுகளை எடுக்க முன்வர வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ப)

# ஒளியூட்டுமா மின்சார சபை

வவுனியா, செப்.22
வவுனியா நகர்ப்பகுதியில் பழுதடைந்த மின்குமிழ்களை மாற்றி புதிய மின்குமிழ்களைப் பொருத்த மின்சாரசபை ஒத்துழைக்க வேண்டும் என்று வவுனியா நகரசபை உபதலைவர் சு. குமாரசாமி தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
வவுனியா நகரப் பகுதியில் நகரசபையால் பொருத்தப்பட்டுவரும் மின்குமிழ்கள் மின்சாரசபைக்கு நிதி செலுத்தப்பட்டு மின்சாரசபையால் விடுவிக்கப்பட்ட ஊழியர் ஊடாகப் பொருத்தப்பட்டு வந்தது. எனினும் தற்போது மின்குமிழ் பொருத்தும் பணிக்கு மின்சார சபை தமது ஊழியரை வழங்காத நிலை காணப்படுகின்றது. இதனால் நகரப்பகுதியில் பழுதடைந்த மின்குமிழ்களை மாற்றியமைக்க முடியாதுள்ளது. -என்றார். (ப-110)



கிளிநொச்சி, முகமாலை தூய ஆரோக்கிய மாதாவின் திருநாள் திருப்பலிப் பூசை யாழ் மறைமாவட்ட ஆயர் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. (ப-6)

# பளை, விளையாட்டு அரங்கம் மதுப் போத்தல்களால் நாசம்

கிளிநொச்சி, செப். 22
பளை பொது விளையாட்டு மைதானத்தின் அரங்கப் பகுதியில் மதுப்போத்தல்கள் உடைக்கப்பட்டு, அவற்றின் சிதறல்கள் விசிறப்பட்டுள்ளன என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.
பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு உட்பட்ட பொது விளையாட்டு மைதானம் பல்வேறு நிகழ்வுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மைதானத்தில் தற்போது மதுபானப் போத்தல்கள் உடைக்கப்பட்டு அவற்றின் சிதறல்கள் அரங்கு முழுமையாக வீசப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. பளை பொலிஸ் நிலையத்தின் முன்பாக உள்ள இந்த மைதானத்தில் இரண்டாவது முறையாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்த விடயம் பளை சிறீபதி விளையாட்டுக் கழகத்தினரால் பச்சிலைப்பள்ளி தவிசாளரின் கவனத்திற்கு கொண்டு செல்லப் பட்டது.
மைதான அரங்கம் இரு ஊழியர்களால் துப்புரவு செய்து பழைய நிலைக்கு கொண்டுவரப்படும். சம்பவம் தொடர்பாக உரியவர்களுடன் கலந்துரையாடி நிரந்தர தீர்வும் பெறப்படும் என்று தவிசாளர் உறுதியளித்தார். (ப-6)



# நந்திக்கடல் களப்பில் கூட்டு வலைத் தொழில்

## சூறையாடப்படும் சிறிய இன மீன்கள்

முல்லைத்தீவு, செப். 22
முல்லைத்தீவு நந்திக்கடல் களப்பில் கூட்டுவலைப் பயன்பாடு அதிகரித்துள்ளதால், சிறிய மீன்கள், நண்டுகள் மற்றும் இறால்கள் என்பன சூறையாடப்படுகின்றன என்று மீனவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.
இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.மோகனகுமார் தெரிவித்ததாவது;
கூட்டு வலையைப் பாவிப்பதன் ஊடாக சிறிய நண்டுகள், மீன்கள், இறால்கள் என்பன பிடிக்கப்படுகின்றன. நாம் அவ்வாறான தொழில் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி வருகின்றோம். இருந்த போதிலும் காட்டுப் பிரதேசங்கள் மற்றும், சன நடமாட்டங்கள் அற்ற பகுதிகளைப் பயன்படுத்தி அவ்வாறான சட்டவிரோத தொழில் நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன. குறிப்பாக தற்போது நீர்மட்டத்தின் கீழே அந்த வலைகளைப் புதைத்து சிறிய நண்டுகள் மற்றும் மீன்களைப் பிடிக்கின்ற முயற்சி இடம்பெறுகின்றது. நந்திக் கடல் முகாமைத்துவக் குழுவுடன் இணைந்து, கடற்றொழில் பரிசோதகர்கள், கடற்றொழில் திணைக்களம் இந்த நடவடிக்கைக்கு எதிராகக் கட்டுப்பாட்டு நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது. இது தொடர்பில் கணிசமான வழக்குகள் முல்லைத்தீவு நீதிமன்றில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. -என்றார். (ப-246)

# உழுந்துச் செய்கையை அதிகரிக்க திட்டம்

வவுனியா,செப்.22
வவுனியாவில் உழுந்துப் பயிர்ச்செய்கையை அதிகரிப்பது தொடர்பாக வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது.
"இவ்வருடம் வவுனியாவில், 13,500 ஏக்கரில் உழுந்துச்செய்கை பண்ணப்படும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அதன்படி ஒரு கிலோ விதை உழுந்து 830 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்டு, 850 ரூபாவுக்கு விவசாயிகளுக்கு வழங்கப்படும்" என விவசாயத் திணைக்கள அதிகாரிகளால் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (ப-110)

# ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

வவுனியா,செப்.22
வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர்களான வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் தலைமையில் நேற்று நடைபெற்றது. கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியூதீன், செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், பிரதமசெயலாளர் அ.பத்திநாதன்,, மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக்டிறஞ்சன், மாவட்டச் செயலர், சமன்பந்துலசேன உள்ளூராட்சிசபைகளின் தலைவர்கள், பிரதேசசெயலர்கள், திணைக்களத் தலைவர்கள், பொலிஸார் என பலரும் கலந்துகொண்டனர். கூட்டத்தில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் தீர்க்கப்படாத முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (ப-110)

# தேவ்தத் - டிவில்லியர்ஸ் அதிரடி சுருண்டது ஐதராபாத்



டுபாய், செப்.22

ஐ.பி.எல். தொடரின் மூன்றாவது ஆட்டத்தில் விராட் கோலி தலைமையிலான ரோயல் செலஞ்சர்ஸ் அணி 10 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

13 ஆவது ஐ.பி.எல். தொடரின் மூன்றாவது ஆட்டம் விராட் கோலி தலைமையிலான ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூரு அணிக்கும் டேவிட் வோர்னர் தலைமையிலான சன் ரைஸஸ் ஐதராபாத் அணிக்கிடையே நடைபெற்றது.

டுபாய் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஐதராபாத் அணியானது களத்தடுப்பை தேர்வு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடுவதற்காக களமிறங்கிய பெங்களூரு அணிக்கு தேவ்தத் படிக்கல் மற்றும் ஆரோன் பிஞ்ச் ஆகியோரின் அதிரடியான ஆரம்பம் கைகொடுத்தது. மொத்தமாக 11 பந்துப்பரிமாற்றங்களை எதிர்கொண்ட இவர்கள் இருவரும் 90 ஓட்டங்



களை பகிர்ந்து கொண்டனர்.



தேவ்தத் படிக்கல் 42 பந்துகளை எதிர்கொண்டு 8 பவுண்டரிகளுடன் மொத்தமாக 56 ஓட்டங்களை குவித்த நிலையில் 10.6 ஆவது பந்துப்பரிமாற்றத்தில் விஜய் சங்கரின் பந்து வீச்சில் பொல்ட் முறையில் ஆட்டமிழந்தார். பிஞ்ச் அடுத்த பந்துப் பரிமாற்றத்தின் முதல் பந்தில் அபிஷேக் சர்மாவின் சுழலில் சிக்கி 29 ஓட்டத்துடன் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

மூன்றாவது இலக்குக்காக அணித் தலைவர் விராட் கோலி, டிவில்லியர்ஸுடன் கை கோர்த்தார். பெங்களூரு அணி 15 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 116 ஓட்டங்களை குவித்தது.

15.5 ஆவது பந்துப்பரிமாற்றத்தில் விராட் கோலி நடராஜனின் பந்து வீச்சில் ரஷித் கானிடம் பிடிகொடுத்து 14 ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். பின்னர் சிவம் டூப்புடன் கைகோர்த்து அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்திய டிவில்லியர்ஸ் 19.2 ஆவது பந்துப்பரிமாற்றத்தில் மொத்தமாக 29 பந்துகளை எதிர்கொண்டு 2 சிக்ஸர்கள் ஒரு பவுண்டரி அடங்கலாக அரைசதத்தை பூர்த்தி செய்தார்.

அவர் அதே பந்துப்பரிமாற்றத்தின் மூன்றாவது பந்தில் இரண்டு ஓட்டங்களை பெற முற்பட்டு "ரன் அவுட்" முறையில் ஆட்டமிழந்தார்.

ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூரு அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களின் முடிவில் 5 இலக்குகளை இழந்து 163 ஓட்டங்களை குவித்தது.

ஐதராபாத் அணி சார்பில் பந்து வீச்சில் விஜய் சங்கர், நடராஜன் மற்றும் அபிஷேக் சர்மா ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கைப் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சன் ரைஸஸ் ஐதராபாத் அணியின் ஆரம்ப வீரர்களாக டேவிட் வோர்னரும், ஜொனி பரிஸ்ரொவும் களமிறங்கினர். ஆறு ஓட்டங்கள் பெற்ற நிலையில் டேவிட் வோர்னர் "ரன் அவுட்" முறையில் ஆட்டமிழந்தார். அதன்பின்னர் ஜொனி பரிஸ்ரொவுடன், மனிஸ் பாண்டே கைகோர்த்தார். சிறப்பாக ஆடிய ஜொனி பரிஸ்ரொ 61 ஓட்டங்கள் பெற்ற நிலையில், சகாலின் பந்துவீச்சில் "போல்ட்" முறையில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து சிறப்பாக விளையாடிய மனிஸ் பாண்டே 34 ஓட்டங்கள் பெற்ற நிலையில் சகாலின் பந்துவீச்சில் நவீனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர் வந்தவர்கள் ஒன்றை இலக்கத்துடன் ஆட்டமிழக்க 19.4 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து சன் ரைஸஸ் ஐதராபாத் அணி 153 ஓட்டங்களைப் பெற்று 10 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. (எ)


## VACANCY ANNOUNCEMENTS

THE HALO TRUST

The HALO Trust is a non-political and non-religious registered British charity which removes land mines and other explosive remnants of war. HALO works in 25 countries and territories globally and has worked in Sri Lanka since 2002 with offices in Kilinochchi, Jaffna, and Colombo.

HALO is seeking hard working candidates for two vacancies as listed below. Both positions are based at our Kilinochchi office (transport from Jaffna may be provided). Interested candidates should submit their CV and a letter explaining their suitability for the post in English to: hr@halosrilanka.org or to The HALO Trust, 450 Thirunagar West Road, Kilinochchi.

**Applications must be submitted no later than 28 September 2020.** Only successful candidates will be contacted. For further information on the roles advertised, please contact 021 228 5466. HALO encourages applicants from all backgrounds to apply and particularly female candidates for all roles.

**IT & DATABASE OFFICER**

Based at HALO's Kilinochchi office, the IT and Database Officer will be responsible for providing support to ensure the smooth running of HALO Sri Lanka's IT and database systems. S/he will assist with IT and database maintenance, database development, and reporting, and will contribute to HALO's information management and mapping activities (ArcGIS). He/she will work with PostgreSQL database associated with the national mine action database and support the National Mine Action Center with data quality, query development and reporting.

**Essential:** 3+ years database administrator/developer and Microsoft server maintenance experience, Excellent knowledge in computer hardware and applications, Basic understating of operating systems, advanced experience using MS Office, MS Access, SQL, Postgre SQL/Post GIS, VBA, ArcGIS. Fluency in Tamil and English

**Desirable:** degree in database and IT related field, valid driving license.

**Data Entry & Community Liaison Support Officer**

Based at HALO's Kilinochchi office, the Data Entry & Community Liaison Support Officer will provide support to our busy information management team. Using MS Office, s/he will assist with data entry and reporting, and mapping activities (training provided if required). S/he will also work with PostgreSQL database associated with the national mine action database and support the National Mine Action Center with data quality, query development and reporting. In the field, s/he will conduct surveys and assessments and conduct case studies of beneficiaries to demonstrate the impact of HALO's work.

**Essential:** fluency in Tamil and English, excellent working knowledge of MS Office (especially Excel and Access), excellent organizational skills, minimum 2 years' work experience, valid driving license.

**Desirable:** 2 years' experience working in a similar data entry and/or community liaison role. Sinhala desirable.

# வெள்ளிக்கிழமைகளில் தேசிய உடை கட்டாயம்

கொழும்பு,செப்.22

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் தேசிய உடை அணிந்து சேவைக்குச் சமூகமளிக்குமாறு இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, அரச ஊழியர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பன்னலப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஊழியர்கள் அணி ய வேண்டிய ஆடை தொடர்பான விதிமுறைகள் எதிர்காலத்தில் அறிவிக்கப்படும்.

இது சட்டம் இல்லை. தேசிய கைத்தொழிலை ஊக்குவிக்க, தேசிய ஆக்கங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 18 . 11 . 1969 — மறைவு 20 . 09 . 2020

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்

**P.K. பாலசிங்கம் பாலசங்கர்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**

## கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் விசேட பொதுக் கூட்டம்

காலம் :- 04.10.2020 ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- முற்பகல் 10.00 மணி
இடம் :- பஞ்சலிங்கம் கேட்போர் கூடம்- கொக்குவில் இந்துக் கல்லூரி

**கலந்துரையாடப்படவுள்ள விடயங்கள்:**

★வரைபு செய்யப்பட்ட யாப்பு தொடர்பாக ஆராய்தல்
★வருடாந்த பொதுக்கூட்டம் ஜனவரி 2021 இல் நடாத்தல்

யாப்பு நகலை www.khcosa.net இணைய தளத்தில் பார்வையிடலாம்.
புதிதாக அங்கத்தவராக இணையவுள்ளவர்கள் செயலாளருடன் 077 608 0926 எனும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அங்கத்தவராக இணைந்து கொள்ள முடியும்.

விசேட பொதுக்கூட்டத்திற்கு பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து சிறபக்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**வி.தயாபரன்**
**செயலாளர்.**

## மரண அறிவித்தல்



மண்ணில் 29 . 12 . 1940 — விண்ணில் 21 . 09 . 2020

**திருமதி தணிகாசலம் தயாநிதி**

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தணிகாசலம் தயாநிதி நேற்று (21.09.2020) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு (கந்தையா) - சிவக்கொழுந்து தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற இராசா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், தணிகாசலத்தின் அன்பு மனைவியும், ஜெயந்தி, சசிகலா ஆகியோரின் அன்பு தாயாரும், சிவானந்தன் (சுவிஸ்) காலஞ்சென்ற மயில்வாகனம் ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், இராசதுரை, நகுலேஸ்வரி, குலநாயகம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற இராசலிங்கம், தியாகராசா மற்றும் சரோஜினிதேவி, புனிதவதி (இந்தியா) ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான மகாலிங்கம், லலிதாம்பிகை, செல்வராசா, ஈஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும், றக்சனா, றஜீவன், றம்மியா (சுவிஸ்), தர்ஷிகா, சஞ்ஜிவன், சங்கீதா (இலங்கை) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2020) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் 209, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று, பூதவுடல் நாரந்தனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பரகள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**தணிகாசலம் (கணவர்)**
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# சசிகலாவால் முன்பள்ளி சிறார்களுக்குச் சத்துமா

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தேர்தல் வேட்பாளர் திருமதி சசிகலா ரவிராஜ் கைதடி பிரதேசத்தில் உள்ள 10 முன்பள்ளிகளில் கல்வியிலும் சிறார்களுக்கு நேற்று திங்கட்கிழமை சத்துமா வழங்கி வைத்தார். கைதடி மேற்கு பராசக்தி பாலர் பகல் இல்லம், கைதடி மத்தி நிறைமதி முன்பள்ளி, கைதடி வடக்கு கலைமகள் முன்பள்ளி, கைதடி வடக்கு அம்பிகா முன்பள்ளி கைதடி கிழக்கு நவசக்தி முன்பள்ளி, கைதடி கிழக்கு வளர்மதி முன்பள்ளி, கைதடி கிழக்கு முன்பள்ளி, கைதடி தென்கிழக்கு விநாயகர் முன்பள்ளி, கைதடி மேற்கு சரஸ்வதி முன்பள்ளி, கைதடி தெற்கு மின்னொளி முன்பள்ளி ஆகிய 10 முன்பள்ளிகளுக்கு நேரடியாகச் சென்ற அவர் சத்துமாவை வழங்கினார். (ப-159)

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 18 . 11 . 1969 — இறப்பு 20 . 09 . 2020

**அமரர் Lion P.K.B பாலசங்கர்**

இவர் எமது கழகத்தில் மூத்த உறுப்பினர்களில் ஒருவராவார். இவர் எமது கழகத்தில் பொருளாளர், செயலாளர், தலைவராக பதவி வகித்தவர். இவர் எமது கழகம் சிறந்து விளங்க பல வழிகளிலும் உதவியவராவார். கழகத்தினால் செய்யப்படும் செயற்றிட்டங்களில் முன்னின்று பங்கு பற்றுபவராவார். இவர் இலங்கை லயன்ஸ் கழகம் 306 B1 மாவட்டத்தில் ஆளுநர் சபையில் மாவட்ட தலைவராக, மாவட்ட இணைப்பாளராக பதவி வகித்தவராவார். இவரது திடீர் இழப்பு எமது கழகத்திற்கு ஒரு பேரிழப்பாகும். அவரை இழந்து துயரில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தார், உறவினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா இறைவனடி சேர பிரார்த்திக்கின்றோம்.

**தலைவர், கழக உறுப்பினர்கள்**
**நல்லூர் லயன்ஸ் கழகம்**

## மரண அறிவித்தல்



தோற்றம் 02 . 08 . 1958 — மறைவு 20 . 09 . 2020

**முருகேசு முருகையா**
**(குண்டுமணியின் மகன்)**

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் இத்தாலியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு முருகையா கடந்த (20.09.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி முருகேசு (குண்டுமணி) மற்றும் பாக்கியம் தம்பதிகளின் அன்புமிகு மகனும்,சிவசுப்பிரமணியம், வள்ளிநாயகி, நல்லம்மா, தெய்வமணி, தங்கவடிவேல், ரேவதி, ஆகியோரின் பாசமிகு சகோதரரும், பிறேமாவதி, சந்திரகலா, அமிர்தநாயகம், முருகையன், மகேஸ்வரன், ஜெகதீஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இத்தாலியிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (22.09.2020) செவ்வாய்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கண்டுவில் உம் ஒழுங்கை,**
**டச்சு வீதி,**
**சாவகச்சேரி.**
**T.P 077 607 9435**
**077 326 6506**

தகவல்:
**குடும்பத்தினர்.**

# பரீட்சைகளுக்கு திகதி அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.22

கொரோனா அச்சம் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான இளஞ் சைவப் புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைகள் எதிர்வரும் 30, 31, மற்றும் ஒக்ரோபர் 01 ஆகிய திகதிகளில் இடம்பெறவுள்ளது என்று அகில இலங்கை சைவப்புலவர் சங்கச்செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளதாவது;

30ஆம் திகதி பிற்பகல் 1 மணி முதல் 4 மணி வரை சாத்திரம், , 31ஆம் திகதி காலை 9 மணிமுதல் 12 மணி வரை இலக்கியம் , பிற்பகல் 1மணிமுதல் 4மணி வரை வரலாறு, 01ஆம் திகதி முற்பகல் 9மணிமுதல் 12மணி வரை இலக்கணம், பி.ப 1மணிமுதல் 4மணி வரை உரைநடை ஆகிய பாடங்களுக்கான பரீட்சைகள் இடம்பெறவுள்ளது. பரீட்சைகள் யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மாகாவித்தியாலயம், மட்டக்களப்பு ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரி ஆகிய பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளன என்றுள்ளது. (ப)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 11 . 08 . 1990



மறைவு 22 . 09 . 2019


### தங்கராஜா அன்ரனி சனால்ட்

இமைகள் மூடித் திறப்பதற்குள்
வருடம் ஒன்றாகி விட்டது
நாம் வாழும் நாளகளில்
உம் நினைவுகள் எம்முடன் என்றென்றும்
வாழும் .... வாழும் .... வாழும் ...

V.V.S. நண்பர்கள்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 12 . 1940



மறைவு 20 . 09 . 2020

### அல்பிரட் கிறிஸ்ரியன்

யாழ்ப்பாணத்தை (309 பாங்ஷால் வீதி) பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட அல்பிரட் கிறிஸ்ரியன் நேற்றுமுன்தினம் (20.09.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அல்பிரட் முத்தையா மார்கிறேட் ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஏபிரகாம் திரேசம்மா (மகராசி)வின் மருமகனும் மணிலாவின் அன்புக் கணவரும் மோகன், செந்தில், ரோய், ருபீனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், மொணிக்கா, அக்னெஸ், கொன்சி, றெஜினா, லூமினா, அலோசியஸ், கிறேஸ்மணி, காலஞ்சென்றவர்களான சிசிலியா, அமலதாஸ், பிரான்சிஸ் ஆகியோரின் அன்புச்சகோதரனும் யேசுதாசன் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம், பிரசாத்,வோன்டர், சுரேஸ்குமார், சாமினி,நாதன், அருளம்மா, காலஞ்சென்ற சந்திரா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்சில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
சகோதரி அக்னெஸ்
021 221 7465

309, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்

பிறப்பு 16 . 11 . 1962



இறப்பு 20 . 09 . 2020

### ஞானானந்தராஜா ராஜன் பெர்னான்டோ

(காப்புறுதி ஆலோசகர்)

ஞானானந்தராஜ ராஜன் பெர்னான்டோ கடந்த (20.09.2020) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானானந்தராஜா - றீற்றா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சரஸ்வதி தம்பதியரின் மருமகனும், ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், பற்றீசியா பிறேமினி (ஆசிரியை-கொழும்பு), லற்றீசியா சுபோதினி, முகுந்தன் சந்தியாகோ (Engineer Australia), பிறிசிலா றூபினி (Swiss), உதயன் மார்சலீனோ (Accountant- சவுதி அரேபியா), Felicia Niranjani (Accountant-Colombo) ஆகியோரின் அன்புச்சகோதரரும், நாகரெட்ணம், கருணேஸ்வரி (அமரர்), கமலேஸ்வரி, நாகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22.09.2020) செவ்வாய்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து புறப்பட்டு அவரது சொந்த இடமாகிய வல்வெட்டித்துறையில் அன்னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டு பிற்பகல் 4.00 மணிக்கு சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும். இந்தஅறிவித்தலை உற்றார் உறவினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி,பிள்ளைகள்,
சகோதரர்கள், மைத்துனர்கள்.

"ஓம் விக்னேஸ்வராய நமஹ"
"ஓம் அம்மா-பகவான் துணை"

## மூன்றாம் வருட நினைவலைகள்

தோற்றம் 02 . 04 . 1944



மறைவு 22 . 09 . 2017

### அமரர் பொன்னம்பலம் நாகரத்தினம் J.P

அகில இலங்கை சமாதான நீதவான், ஓய்வுநிலை பொறியியலாளர்.
சின்னாலடி, காரைநகர்.

ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தாலும்
ஆறாது எங்கள்- துயர்
மறையாது எங்கள்- சோகம்
மறக்கமுடியுமா?- உங்கள் சேவையை
மாணவர்கள் எங்களுக்காய் - நீங்கள்
அல்லும் பகலும் ஆற்றிய - தியாக சேவை
எம் மனத்திரையில் விரிந்தே - தொடர்கிறது
ஊர்ப் பிள்ளைகளுக்காய் - உங்களை
அர்ப்பணித்தவர் - நீங்கள்
எங்கள் மதிப்புமிகு ஆசானே!
சிறந்த சமூக சேவையாளனே!
அறிவுக்களஞ்சியமே!
சோதிட விற்பனரே!
தீர்க்கதரிசனமாய் - நீங்கள்
சொன்ன வார்த்தைகள் - இன்று
நனவாவதை- நினைந்து
அதிசயித்து நிற்கின்றோம் - நாம்
கலாநிதி தியாகராஜாவின் பிரிய உறவினரே!
பேராசிரியர் கென்னடியின் - உறவினராய்
உற்ற நண்பராய் விளங்கிய - நீங்கள்
கென்னடியை உங்களுடன் - அழைத்துச்
சென்ற மாயமென்ன?
உங்கள் அன்புத்துணையாம் - எங்கள்
மதிப்புமிகு அதிபரைத்- தேற்றுதற்கு
வார்த்தைகள் இல்லை - ஐயா!
கல்விக்காருண்யனே! அறிவுநிறை மாமனிதா
உங்கள் சேவையைப் பின்பற்றி
நாமும் தொடர்வதற்காய்
எங்களை வாழ்த்திடுவீர் அறிஞனே!

உங்கள் பாசமிகு பழைய மாணவர்கள்
காரைநகர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 02 . 04 . 1944



மறைவு 22 . 09 . 2017

### அமரர் பொன்னம்பலம் நாகரத்தினம்

(அகில இலங்கை சமாதான நீதவான்.
ஓய்வு பெற்ற பொறியியலாளர்.இ.போ.சபை)

காலங்கள் கடந்தாலும்
கண்முன்னே நித்தமும்
வந்து போகிறீர்கள் நினைவுகளாய்

உமை எண்ணிப்பார்க்கையில்
கண்களே குளமாகின்றது
நித்தமும் தவிக்கின்றேன்
உம் நினைவுகளுடன்

உதவிகள் செய்வதில் வல்லவரே
காரை மண்ணிலே பிறந்து
காரை மக்களுக்கே சேவைசெய்து
காரை மண்ணிலேயே
இறைவனடி சேர்ந்து விட்டீரே

காற்றை விட வேகமாக
மூன்றாண்டுகள் கடந்தனவோ?
எத்தனை ஆண்டுகள்
கடந்தாலும் அழியாது உம் நினைவுகள்
எனைவிட்டு

என்றும் உங்கள் நினைவோடு வாழும்
இல்லாள்

# ஹெரோய்னுடன் பெண் கைது



யாழ்ப்பாணம், செப்.22

யாழ்ப்பாணம் கொழும்புத்துறைப் பகுதியில் ஹெரொய்ன் போதைப் பொருளுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மதுவரித் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

அதே இடத்தைச் சேர்ந்த 18 வயது டைய பெண் ஒருவரே நேற்று இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்

மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த நபர் யாழ் கொழும்புத்துறைப் பகுதியில் ஹேரோயினை மறைத்து வைத்திருந்த நிலையில் மதுவரித் திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் மதுவரித் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (ப-159)

## சிறுநீரகம் தேவை

O , B இரத்த வகையை சேர்ந்த சிறுநீரகம் தேவை.

தொடர்பு: 076 239 9874

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ 1985 இல் பிறந்த 12 ல் சூரியன் செவ்வாய் (கி.பா 15) அரச தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு: 077 576 1556
077 800 2051

## வேலைக்கு ஆட்கள் தேவை

பலாலி வீதி, கோண்டாவில் டிப்போ முன்பாக உள்ள கட்டடப் பொருட்கள் வியாபார நிலையத்துக்கு (ஹாட்வெயார், மரம்) விற்பனையாளர் தேவை.
வயது எல்லை: 40 உட்பட்டவர் (ஆண்)
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:
021 222 5098 / 077 55 89254
நேரில் சந்திக்கவும்.

## தவறி விட்டது

தச்சன் தோப்பு கைதடி என்னும் முகவரியில் வசிக்கும் நல்லையா பாலசிங்கம் (542963778V) ஆகிய நான் எனது அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் (85085977) என்பவற்றை தவறவிட்டுள்ளேன். கண்டு எடுத்தவர்கள் **077 483 2038** எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## ஊர்காவற்றுறை
## ப.நோ.கூ.சங்கம் ஊர்காவற்றுறை

**இரண்டு சக்கர உழவு இயந்திரத்திற்கான கலப்பை விற்பனைக்கு**

மேற்படி கலப்பை எம்மிடம்
விற்பனைக்கு உண்டு.
அலுவலக நேரத்தில் பார்வையிட்டு
கூறுவிலையை 05.10.2020 ஆம்
திகதிக்கு முன் சமர்ப்பிக்கவும்.

பொதுமுகாமையாளர்.
தொலைபேசி எண்:
021 221 1648

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 30 . 04 . 1948 |  | 21 . 09 . 2020 |

### திருமதி ரஞ்சினி ஜெயரத்தினம்

தோப்பு, ஏழாலை தெற்கை பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரஞ்சினி ஜெயரத்தினம் நேற்று (21.09.2020) திங்கட்கிழமை கொழும்பில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குணநாயகம் ஞானமலர் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஞானரத்தினம் சீவமணி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற டேவிட் ஜெயரத்தினத்தின் அன்பு மனைவியும், றிச்சேட் ஜெயரஞ்சிற் (Australia), சாமுவேல் ஜெயந்தன் (U.K), சொலமன் ஜெயரூபன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், மனோரஞ்சன் (ஓய்வுநிலை ஆசிரியர்), சுகந்தினி (U.K) காலஞ்சென்ற வினோதினி மற்றும் அல்பிறட் சுகந்தன் (U.S.A)ஆகியோரின் அன்புச்சகோதரியும், வதனி (Australia), அகித்தா (U.K) நிசாந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெயமணி, ஜெயராஜா, டொறத்தி மனோகரி, காலஞ்சென்றவர்களான ஜோன் தம்பிராஜா, வெஸ்லி இராஜகுமார், மற்றும் தயாளினி (U.S.A) ஆகியோரின் மைத்துனியும், சுஜாத்தா ஜேம்ஸ், சாள்ஸ், ஜோயல் ஆகியோரின் பெரியம்மாவும், பீற்றர் ஞானராஜன்(சனோ), கிளெஸ்ரன் ஜேசுராஜா (சாந்தன்) ஆகியோரின் சிறிய தாயாரும், நிசாந்தி ஜெயரூபன், கிறிஸ்ரி மனோரஞ்சன், ஹனா சுகந்தன், தனஞ்சயன் நித்தியரத்தினம், நித்தியராஜன் நித்தியரத்தினம், ஜெயநிதி ஜீவரூபன், ஜெயவதி தனராஜன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெயருஷா, ரனுஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22.09.2020) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 6.00 மணிக்கு இறுதி அஞ்சலிக்கான ஆராதனை நடாத்தப்படும்.

இறுதி நல்லடக்க ஆராதனை (23.09.2020) புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு "தோப்பு ஏழாலை தெற்கில் நடைபெற்று ஏழாலை தெற்கு C.A.C.M சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தோப்பு,**
**ஏழாலை தெற்கு,**
**சுன்னாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**Ruban: 077 731 1772**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## நெடுந்தூரம் சென்று பதினொரு ஆண்டுகள்



**மண்ணில்** 15.04.1949 **விண்ணில்** 24.09.2009

### அமரர் கந்தசாமி தங்கராசா (பத்தர்)

**திதி: பூர்வபக்க ஷஷ்டி**
**(22.09.2020)**

*எங்கள் ஆசை அப்பாவே !*

கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகி போனாலும் எங்கள் முன்னே நீங்கள் எந்நாளும் உயிர் வாழ்கிறீர்கள் **அப்பா** மனம்விட்டு அழ உங்கள் மடி வேணும் அப்பா.

*உங்கள் நினைவுடன் வாழும்*
**குடும்பத்தினர்**
**601, கே.கே.எஸ் வீதி,**
**நாச்சிமார் கோவிலடி.**

## மரண அறிவித்தல்



### திருமதி உருத்திரமூர்த்திக்குருக்கள் நாகேஸ்வரி அம்மா

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும், அளவெட்டி வடக்கை வசிப்பிடமாகவும் பிரான்சில் வசித்தவருமாகிய உ.நாகேஸ்வரி அம்மா கடந்த (14.09.2020) திங்கட்கிழமை பிரான்சில் இறையடி சேர்ந்துள்ளார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2020) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.45 (பிரான்ஸ் நேரம்) மணிக்கு பிரான்ஸ், Cimetiere d Avon 66 ruedv Souvenir, 77210 Avon என்ற இடத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வீரபத்திரர் கோயிலடி,**
**அளவெட்டி வடக்கு,**
**அளவெட்டி.**

**தகவல்:**
**உ.அருந்தவக்குமார் ஐயா,**
**உ.ஜீவசங்கர்க்குருக்கள்**
**உ.சுகாஜனன்,**

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சின்னத்தம்பி மருதலிங்கம்

### (உரிமையாளர் V.S.M ஸ்ரோர்ஸ், மானிப்பாய்)



மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மருதலிங்கம் நேற்று (21.09.2020) திங்கட் கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மருதலிங்கம் கனகமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி முத்துப்பிள்ளை தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சின்னம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான V.S கந்தையா, V.S. கணபதிப் பிள்ளை, சபாரட்ணம் பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், இரஞ்சினி (லண்டன்), பிருதுவியு (ஜேர்மனி), சாந்தினி (கனடா), தயாளன் (V.S.M ஸ்ரோர்ஸ்-மானிப்பாய்), ரேவதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சண் முகநாதன், கமலகுமார், செல்வரட்ணம், ரஜனி, ராஜ்குமார் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மீனா, சாரா, அங்கீசன், கபிஷன், துளசி, தயாளினி, கனகலோஜினி, விநோயா ஆகி யோரின் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: மகன்**
**T.P: 021 225 6171, 076 6849 739**
**கனகசபை வீதி, மானிப்பாய்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 11 . 08 . 1990
மறைவு 22 . 09 . 2019



அமரர்
**தங்கராஜா அன்ரனி சனால்ட்**

உன் நினைவுகளுடன் எம்
வாழ்க்கைப் பயணம்
உன் நினைவுகளைத் தவிர இன்று
எம்மிடத்தில் ஒன்றும் இல்லையடா!

நிஜம் என்று எண்ணி இருந்தோம் இன்று
நினைவாகவே மாறிவிட்டாயடா!
வழித்துணையாக நீ வருவாய்!
எம் நிழலாக என்று எண்ணி
பயணித்துக் கொண்டிருக்கின்றோமடா!
எம் செல்லமே!
உன்னை நினைக்கும் போதெல்லாம்
விழியின் ஓரம்
உன் நினைவுத் துளிகள்
கண்ணீராய் கரைகிறதடா!

இல.18, மடம் வீதி, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## முதலாமாண்டு நினைவஞ்சலி



பிறப்பு 24 . 11 . 1943
இறப்பு 04 . 10 . 2019

**அமரர் மயில்வாகனம் பரமநாதன்**

திதி: ஷஷ்டி

இயற்கையில் ஒன்று மரணம்
இயன்றளவு முயற்சித்தும் முடியவில்லை
உங்கள் நினைவு

இணுவையம்பதியிலே பிறந்து
இன்பமாக வாழ்ந்து
ஆறுமுகன் துணைகொண்டு
அழகிய மனைவியோடு அறுவரைப் பெற்றீர்
அன்பாய் அரவணைத்து ஆனந்தமாய் வாழ்ந்து கவிதைகள்
பல வடித்து கவிஞனாக
நகைச்சுவைப் பேச்சிலே நடிகனாக
எல்லோர் முகத்திலும் புன்னகை பூக்கவைத்தீர் காலனுக்கும்
உம்மைப் பிடித்துப்போக
கலங்கி நாம் நிற்கிறோம் அப்பா!!
காணமாட்டோம் என்றுதானோ
கந்தன் காலடியில் சேர்ந்தீர்
கலங்கி நாங்கள்
ஆறாது மனம்
நீங்காது உங்கள் நினைவு

"திருப்பதி"
கே.கே.எஸ்.வீதி,
இணுவில் கிழக்கு, இணுவில்.

குடும்பத்தினர்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணின் மடியில் 05 . 10 . 1933



இறைவன் அடியில் 22 . 09 . 2020

**அமரர் சந்திரசடாசிவம் மகேஸ்வரி**

திதி: பூர்வபட்ஷ சதுர்த்தி


கடந்த 22.08.2020 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம் **அமரர் சந்திரசடாசிவம் மகேஸ்வரி** அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (22.09.2020) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 9.00 மணியளவில் நடைபெறவுள்ளது. எனவே அத்தருணம் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறவுள்ள மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

காளிகோயிலடி,
குளப்பிட்டி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 10 . 1946



மறைவு 18 . 09 . 2020

**ஆறுமுகம்பிள்ளை சிவசுப்பிரமணியம்**

யாழ். காரைநகர் களபூமி பாலாவோடையைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம்பிள்ளை சிவசுப்பிரமணியம் அவர்கள் 18.09.2020 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற குமாரிசங்கரி ஆறுமுகம்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற Dr. குமாரசாமி - தனலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், எம்பர் ஆறுமுகம் அவர்களின் அன்புப் பேரனும், தவமலர் அவர்களின் அன்புக் கணவரும், Dr. வரதராஜன் (கண்ணன்), சிவாஜினி (ஜினி) ஆகியோரின் அன்புத் தந்தையும், செபஸ்தியான் அவர்களின் அன்பு மாமனாரும், தம்மி, மிலா ஆகியோரின் அன்புப் பேரனும், யோகேஸ்வரி, வசந்தாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், Dr. மகேந்திரராஜா, ஞானப்பிரகாசம், விஜயலட்சுமி, யோகாம்பிகை, செல்வமலர், Dr. கணேசலிங்கம், காலஞ்சென்ற சோமாஸ்கந்தராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (பரமு) மற்றும் ரட்ணசபாபதி, நந்தகுமார், அன்பரசி ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தொடர்புகளுக்கு**
தவமலர் - மனைவி
Mobile : + 496 298 937 136
Mobile : + 496 298 3436
யோகேஸ்வரி - சகோதரி
Phone : + 441 322 531 896
வசந்தாதேவி - சகோதரி
Phone : + 442 085 545 565

தகவல் :
குடும்பத்தினர்.

## திலீபனின்.....

இவ்வாறு தெரிவித்துள்ளார் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார.

தியாகி திலீபனின் நினைவேந்தலை நடத்துவதற்குப் பொலிஸார் நீதிமன்றின் ஊடாகத் தடை உத்தரவு பெற்றுள்ளனர். இது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. இந்தத் தடைக்கு எதிராகக் கடும் எதிர்ப்பும் கிளம்பியிருந்தது. இது தொடர்பாகக் கேட்டபோதே அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

திலீபன் உண்ணாவிரதம் இருந்தபோது அந்தப் போராட்டத்தின் மகிமையை அறிந்து அவரை நான் நேரில் சந்தித்திருக்கின்றேன். அநியாயமாக ஒரு உயிர் போகக் கூடாது என்பதற்காக உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடுமாறு திலீபனிடமும், அவரது இயக்கத்தினரிடம் நாம் கோரியிருந்தோம்.

ஆனால் திலீபன் கொண்ட கொள்கையில் உறுதியாக இருந்து இறுதியில் உயிர் நீத்தார். அவரது உண்ணாவிரதப் போராட்டத்தை எவரும் கொச்சைப்படுத்த முடியாது. தமிழராகட்டும், சிங்களவர்களாகட்டும், முஸ்லிம்கள் ஆகட்டும் அந்தப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்திப் பேச முடியாது. அது உன்னதமான போராட்டம். திலீபன் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர் என்பதால் நாட்டின் சட்டத்தின் பிரகாரம் அவரும் பயங்கரவாதி என்ற பெயரெடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் நீதிமன்றம் அவரது நினைவேந்தலுக்குத் தடை விதித்துள்ளது. இந்தத் தடை உத்தரவுக்கும் அரசுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை. நீதிமன்றம் தனது தீர்ப்பை மறு பரிசீலனை செய்யவும் உரிமையுண்டு. என்றார். (எ-22)

## திலீபனை அஞ்சலிக்க .....

திகதியிட்டது.

தியாகி திலீபன் நினைவேந்தல் தற்போது கடைப்பிடிக்கப்படும் நிலையில், பொலிஸார் நீதிமன்றத்தின் ஊடாக அதற்குத் தடை விதித்திருந்தனர்.

தியாக தீபம் திலீபன் நினைவேந்தல் ஊடாக இலங்கை குற்றவியல் நடைமுறை சட்டக் கோவை 106ஆம் பிரிவின் கீழ் பொதுக்குழப்பம் ஏற்படும் என்று பொலிஸாரால் 'பி' அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் கடந்த திங்கட்கிழமை அழைக்கப்பட்டது.

பொலிஸாரின் விண்ணப்பம் மன்றால் ஏற்றுக்கொள்ளப்பட்டு தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு தடை விதித்து உத்தரவிடப்பட்டது. அத்துடன், இந்த வழக்கில் பிரதிவாதிகள் 20 பேரையும் மன்றில் இன்று முன்னிலையாக அழைப்புக் கட்டளை சேர்ப்பிக்க உத்தரவிட்ட மன்று வழக்கை ஒத்திவைத்து.

மூத்த சட்டத்தரணிகள் என்.சிறிகாந்தா, வி.திருக்குமரன், கணாதீபன் மற்றும் சட்டத்தரணி சுகாஷ் ஆகியோர் இலங்கை குற்றவியல் சட்டக்கோவையின்106 பிரிவின் 4ஆம் உப பிரிவின் கீழ் இந்த வழக்கை பொலிஸார் தாக்கல் செய்தமை தவறு என்று சட்ட ஏற்பாடுகள், முற்தீர்ப்புகளை வைத்து நீண்ட சமர்ப்பணத்தை முன்வைத்தனர்.

தியாக தீபம் திலீபன், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர் என நிரூபிக்க அவரது வாழ்க்கை வரலாற்றை முன்வைத்து யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமர்ப்பணம் செய்தார். தியாகி திலீபனின் நினைவேந்தலுக்கு மக்கள் கட்டாயமாக அழைத்து வரப்படவுள்ளனர் என்றும் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

இரு தரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த மன்று யாழ்ப்பாணம் மாநகர் முதல்வர் உள்ளிட்ட இருவரது சமர்ப்பணங்களையும் முன்வைக்கும் வாய்ப்பு தக்க வைக்கப்பட்டுள்ளதுடன், கட்டளை, வரும் வியாழக்கிழமை வழங்கப்படும் என்று அறிவித்தது. (ம-26)

## நரிகளிடம்.......

தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

எமது ஆட்சியின்போது கோப் குழுவின் தலைவர் பதவியை எதிரணி உறுப்பினருக்கு வழங்கி சிறந்த முன்னுதாரணத்தை வழங்கினோம். ஆனால் இம்முறை கோப் மற்றும் கோபா குழுக்களின் தலைமைப்பதவி ஆளுங்கட்சிக்கே வழங்கப்படவுள்ளது என எமக்கு தகவல் கிடைத்துள்ளது.

அவ்வாறு நடைபெறுமானால் அது நரிகளிடம் கோழிக் குஞ்சுகளை ஒப்படைக்கும் செயல்போல் ஆகிவிடும். வகைதொகையின்றி ஊழல்கள் நடைபெறலாம். எனவே, இவ்விரு குழுக்களினதும் தலைமைப்பதவி எதிரணிக்கு வழங்கப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தன்னை நடுநிலைவாதிபோல் காட்டிக்கொள்வதற்கு முயற்சிக்கின்றார். அது உண்மையானால் கோப் மற்றும் கோபா குழுக்களின் தலைமைப்பதவியை எதிரணிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏனெனில் இவ்விரு குழுக்களிலும் ஆளுங்கட்சி உறுப்பினர்களே பெரும்பான்மையாக உள்ளனர் என்றார்.

அதேவேளை, அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்ட மூலம் தொடர்பில் கருத்து வெளியிட்ட நளின் பண்டார, '20' ஐ சர்வஜன வாக்கெடுப்புக்கு உட்படுத்த வேண்டும் என நீதிமன்றத்தில் வலியுறுத்துவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி எதிர்பார்த்துள்ளது என்று குறிப்பிட்டார். (எ-44)

## பணிப்பாளர்.......

புதிய உதவிப் பணிப்பா ளராக வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளர் ரி.விஸ்வரூபன் நியமிக்கப் பட்டுள்ளார். இன்றிலிருந்து இந்த இடமாற்றம் நடை முறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றத்துக்கான காரணம் வெளிவரவில்லை. இருப்பினும், அரசியல் பழிவாங்கல் காரணமாக இந்த இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக யாழ்ப்பாண மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை கொரோனா இடர் காலத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் சிலர் மோசடியில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இறுக்கமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவர்கள் பணி இடைநிறுத்தப்பட்டனர். இவ்வாறானதொரு பின்னணியி லேயே இந்த இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஒ,5)

## 3ஏ சித்தி பெற்ற .......

ஆனந்தபுரத்தில் நேற்றுக் காலை நடந்துள்ளது.

கிளிநொச்சி மலையாளபுரம் பகுதியைச் சேர்ந்த (வயது-21)யோகேந்திரன் அயந்தன் என்ற இளைஞரே உயிரிழந்தவராவார். இவர் க.பொ.த. உயர்தரத்தில் வணிகத்துறையில் கற்று மூன்று பாடங்களிலும் "ஏ" சித்தி பெற்றவராவார்.

இவர் நீண்ட நேரமாக கைத்தொலைபேசியில் பேசிய படி அங்கு நின்றுள்ளார். யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த மன்னவாகினி ரயிலுடன் மோதி உயிரிழந்துள்ளார். இவர் தவறான முடிவு எடுத்து ரயில் முன் பாய்ந்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. எனினும் அதற்கான காரணம் தெரியவரவில்லை.

விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-ம-6,ரி1)

## "ஐஸ்கிறீம்".........

அங்கிருந்த பணத்தைப் பறித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை கல்வியங்காடு, புதிய செங்குந்தா வீதியில் நடந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த ஐந்து பேர் கொண்ட கும்பலே பணத்தைப் பறித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கோப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-26)

## முகமாலையில் .........

கிளிநொச்சி நீதிவான் முன்னிலையில் நடைபெறவுள்ளன.

கிளிநொச்சி முகமாலைப் பகுதியில் கடந்த மே மாதம் மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளின்போது மனித எலும்பு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இரு பெண்களின் எலும்பு எச்சங்களே கண்டுபிடிக்கப்பட்டன. கண்ணிவெடி அகற்றும் நிறுவனப் பணியாளர்கள் அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்திருந்தனர்.

அதன்பின்னர் நீதிமன்ற அனுமதி பெற்று அந்த இடத்தில் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சீருடை, மனித என்பு எச்சங்கள், துப்பாக்கிகள், இலக்கத் தகடு என்பன மீட்கப்பட்டிருந்தன.

இந்த அகழ்வுப் பணிகளின் தொடர்ச்சியாகவே இன்றும் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (எ-6)

## உயிர்களை .........

கப்பட்டது என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. புதிதாக அமைக்கப்பட்ட இந்தக் கட்டடம் நேற்றுமுன்தினம் அதிகாலை 5 மணியளவில் இடிந்து அருகில் உள்ள வீட்டின் மீது விழுந்தது. அந்த வீட்டின் இடிபாடுகளுக்குள் சிக்கி ஒன்றரை மாதக் குழந்தையும் அந்தக் குழந்தையின் 32 வயது தாயும், 35 வயது தந்தையும் உயிரிழந்திருந்தனர்.

இந்நிலையில் இந்தக் கட்டடம் தொடர்பாக ஆய்வுகளை நடத்தியுள்ள கட்டட ஆராய்ச்சி நிறுவன அதிகாரிகள், அந்த கட்டடம் விதி முறைகளை மீறி அமைக்கப்பட்டது என்பதனை கண்டுபிடித்துள்ளனர். அதன் அத்திவாரம் முதல் அனைத்து விடயங்களும் விதி முறைகளை மீறியே அமைக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

கட்டடங்களை அமைக்கும்போது கட்ட ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆலோசனைகளைப் பின்பற்ற வேண்டும் என்ற போதும், இந்த கட்டடம் அவ்வாறாக ஆலோசனைகளை பின்பற்றாதே அமைக்கப்பட்டுள்ளது. இதனாலேயே அந்தக் கட்டடம் இடிந்து விழுந்துள்ளது என ஆய்வு நடத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (எ-22)

## சஜித்தின் ........

றும் சந்திம பண்டார ஆகியோர் நேற்று எதிர்க்கட்சித் தலைவரைச் சந்தித்து ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினராவதற்கு விண்ணப்பித்துள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதேவேளை, ஐக்கிய தேசிய கட்சியின் ராஜகம பிரதேச சபையின் உறுப்பினர் துலாஜ் தரங்காவும் நேற்று ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## சட்டப்புத்தகத்தில் ........

வர்த்தமானி அறிப்பை விலக்கிக் கொள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தயாராக இல்லை.

இவ்வாறு கல்வி பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேவைப்படும் பட்சத்தில் குழுநிலையின் போது மாத்திரம் மாற்றங்களை மேற்கொள்வதற்கு உடன்படுகின்றோம். திருத்தச் சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் ஏழு நாள்களுக்குள் இது தொடர்பான எதிர்ப்புக்களை உயர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கலாம்.

அது தொடர்பான விசாரணைகளை உயர் நீதிமன்றம் மேற்கொள்ளும். அதன்பின்னர் உயர் நீதிமன்றம் ஜனாதிபதிக்கும் பாராளுமன்றத்திற்கும் அதன் நிலைப்பாட்டை அறிவிக்கும்.

பொதுத் தேர்தலின்போது ஆரம்பம் முதல் இறுதி வரை நாம் தொடர்ச்சியாக 20 ஆவது அரசியல் திருத்தம் தொடர்பான எமது நிலைப்பாட்டை பொது மக்கள் முன் வைத்தோம்.19ஆவது திருத்த சட்ட மூலம் நாட்டுக்கு ஓர் சாபக்கேடு. அதில் பகுதி பகுதியாக திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதில் பயன் இல்லை. இது இந்த நாட்டின் சட்டப் புத்தகத்தில் இருந்து நீக்கப்பட வேண்டிய ஒன்றாகும். என்றார். (எ-இ)

## மோடியுடன் ........

படவுள்ளன என்று "இந்தியா டுடே" செய்தி வெளியிட்டுள்ளது.

அயல்நாட்டு தலைவர் ஒருவருடன் இரு தரப்பு உறவு குறித்து இந்திய பிரதமர் மேற்கொள்ளும் முதலாவது சந்திப்பு இதுவென தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே தினம் இந்தியப் பிரதமர், ஐக்கிய நாடுகளின் பொது சபையில் உரையாடவுள்ளார்.

இந்த உரையில் இந்தியாவின் அயல் நாடுகளுடனான கொள்கை குறித்து அவர் கோடிட்டு காட்டுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தியாவால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் தொடர்பாகவும் இந்த சந்திப்பின் போது ஆராயப்படும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக பாதிப்படைந்த நாடுகளுக்கு இந்தியா வழங்கிய ஒத்துழைப்பு தொடர்பாகவும் அவர் உரையாற்றுவார் என நம்பப்படுகின்றது. (எ-இ)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்

பிறப்பு 29 . 06 . 1933



இறப்பு 21 . 09 . 2020

## சுப்பிரமணியம் மயில்வாகனம்

யாழ். மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், மல்லாகம், அவுஸ்திரேலியா Melbourne ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் மயில்வாகனம் அவர்கள் நேற்று (21.09.2020) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார், காலஞ்சென்ற சுப்பிரமணியம், இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பையா, கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் (Melbourne) பாசமிகு கணவரும், மோகன் (Melbourne), மகேந்திரன் (சுவிஸ்), ஜீவன்(சுவிஸ்), காலஞ்சென்ற அகிலன், யசோ வரதராசன் (பிரான்ஸ்), குமணன் (லண்டன்), மதனன் (மதி- Melbourne) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை, பூமலர் தர்மலிங்கம் (Melbourne), பகவதி பாலசுப்பிரமணியம் (உடுப்பிட்டி), காலஞ்சென்ற தம்பித்துரை, கந்தசாமி (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திவாகரன் (சிட்னி), தர்ஷினி மதனன் (Melbourne), சங்கீதா பரோபன் (கனடா), சஞ்சீவன் (கனடா), முகுந்தன் (உடுப்பிட்டி), கவாஷ் (லண்டன்), இராஜேஸ்வரி மோகன் (Melbourne), பவானி மகேந்திரன் (சுவிஸ்), சீதாதேவி ஜீவன் (சுவிஸ்), வரத ராசன் (பிரான்ஸ்), ஜெனித்தா குமணன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமானாரும், சுகந்தா(இலங்கை), மயூறா(இந்தியா), மயூறன்(இந்தியா) ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும், ரோஷினி, ஹேமப்பிரியா, ஷாலினி, சுவீவன், மதுசன், சீனுஜன், ஜீனுவா, ஜீவிகன், ரதீனா, கீஷோன், கவீனா, சந்தோஸ், சப்ராஸ், யவினாஸ் ஆகியோரின் அன்பு அப்பப்பாவும், ஹாசினியின் அன்பு அம்மப்பாவும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியை White Lady Funerals Epping 25 Cooper St, Epping VIC 3076, Australia என்ற முகவரியில் நடைபெறும். மேலதிக் விபரம் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மில் லேன், மல்லாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

பிறப்பு 09 . 07 . 1944



இறப்பு 21 . 09 . 2020

## தர்மலிங்கம் கனகலிங்கம்

(முன்னாள் D.K.Traders முத்தையா மோட்டார் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

யாழ்ப்பாணம் கொட்டடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் D.K.Traders முத்தையா மோட்டார் ஸ்ரோர்ஸ் உரிமையாளருமாகிய தர்மலிங்கம் கனகலிங்கம் நேற்று (21.09.2020) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம்-கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சீனித்தம்பி-இரத்தினம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற பத்மலோஜினி கனகலிங்கத்தின் அன்புக் கணவரும், திலிப்குமார், தர்மகுமார், திருலோக்குமார், நவநீதகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம், பத்மாவதி, தண்டாயுதபாணி, சத்தியலட்சுமி, யுகலட்சுமி, பத்மலிங்கம் மற்றும் நடேசலிங்கம், செல்வநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சித்திரா, பாலசுப்பிரமணியம், பிரேமா, சுபாசினி மற்றும் காலஞ்சென்றவர்களான குணரட்ணம், கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும், ரேணுகா, வித்தியவாணி, பிரபா, சிவலோகநாயகி ஆகியோரின் மாமனாரும், சரண்ஜா, திவ்வியா, யதுசிகா, கௌதம்-அபிலாசினி, வினோத், நிரோஜன், கஜந்தி, கஜந்தன், காயத்திரி, கீர்த்தன், ஆகாஷ், அவினாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2020) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப. 10.00 மணியளவில் வில்லூன்றி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


67/45, தர்மலிங்கம் அவெனியூ
கொட்டடி, யாழ்ப்பாணம்.
021 222 7796

தகவல்:
க.நவநீதகுமார்(மகன்)

# மரண அறிவித்தல்

## லயன் P.K.பாலசிங்கம் பாலஸங்கர்

(முகாமைத்துவ உதவியாளர்-பிரதேச செயலகம்-உடுவில், முன்னாள் தலைவர், லயன்ஸ் கழகம்-நல்லூர்)



இல.718, "சங்கரியார் வளவு", சிவலிங்கப்புளியடி, வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட லயன் P.K பாலசிங்கம் பாலஸங்கர் (முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், உடுவில்), கடந்த (20.09.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற P.K பாலசிங்கம் "படியாதவன்" (ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்- விஞ்ஞானம்) மற்றும் சிவபதிமலர் தம்பதியரின் அன்பு மூத்த மகனும், காலஞ்சென்ற தங்கராசா மற்றும் சந்திராதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், பிரபாலினியின் (உதவி முகாமையாளர், SLT Jaffna) பாசமிகு கணவரும், பாலரிஷாந் (பழைய மாணவன்-யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 2017 A/L, HND in Quantity Surveying), பாலசிவானுஜன் (பழைய மாணவன்-யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 2019 A/L), பாலசுஜித் (மாணவன்- யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி-தரம் 09) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலமயூரனின் (கனடா) அன்புச் சகோதரனும், சோபனாவின் அன்பு மைத்துனரும், கௌசிக், அஸ்வின் (கனடா) ஆகியோரின் பெரிய தந்தையும், காலஞ்சென்ற குமாரகுலசிங்கம்-தவமணி, செல்வி யோகேஸ்வரி (ஓய்வு நிலை பிரதி அதிபர்-யாழ் இந்து மகளிர் கல்லூரி), ராஜேஸ்வரி (ஓய்வுநிலை பிரதி அதிபர், முஸ்லிம் மகா வித்தியாலயம், வவுனியா)- சுந்தரநடராஜன் (ஓய்வுநிலை அதிபர்), ரத்தினேஸ்வரி (ஓய்வுநிலை உத்தியோகத்தர், பிரதேச செயலகம்-உடுவில்)-காலஞ்சென்ற ஜெயபாலன் ஆகியோரின் பெறாமகனும், தயாளினி, மகேந்திரராஜா (சுவிஸ்), சாலினி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், ஜெயந்தன் (அதிபர்-வசாவிளான் மத்திய கல்லூரி), ரகுபதி, வளர்மதி (சுவிஸ்) ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும், காலஞ்சென்ற சிவஞானகுரு- புவனேஸ்வரி, காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் காந்திமதி, காலஞ்சென்ற சிவபாலன் (சிறாப்பர்) மற்றும் கனகமணி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2020) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணிக்கு ஆரம்பித்து முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

021 222 3118, 071 430 4761
00141 68244581 (சகோதரன்-கனடா)

தகவல்: பிரபாலினி (மனைவி)
பாலரிஷாந் (மகன்), பாலசிவானுஜன் (மகன்), பாலசுஜித் (மகன்),
பாலமயூரன் (தம்பி)

# நாடாளுமன்றத்துக்கு வருகிறார் ஞானசாரர்



**கொழும்பு, செப். 22**

**பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரரை நாடாளுமன்றம் அனுப்புவதற்கு எங்கள் மக்கள் சக்தி கட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அத்துடன், தலைமறைவாகியுள்ள பொதுச்செயலரை நீக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

எங்கள் மக்கள் சக்தி கட்சியின் சம்மேளனம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போது கட்சியின் அனுமதியின்றி தேசியப்பட்டியல் எம்.பி பதவிக்கு தனது பெயரைத் தேர்தல் ஆணைக்குழுவுக்கு பரிந்துரைசெய்த பொதுச்செயலர் வெதனிகம விமலதிஸ்ஸ தேரரை கட்சியை விட்டு நீக்குவதற்கும், ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், கட்சியின் தலைவரை நாடாளுமன்றம் அனுப்பி, அடுத்த நாளே அவர் இராஜினாமாச் செய்த பின்னர் அந்த இடத்துக்கு ஞானசார தேரரை நியமிப்பதற்கான யோசனைக்கும் சம்மேளனம் அனுமதி வழங்கியுள்ளது. பொதுச்செயலாளர் நீக்கப்பட்ட விடயம் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்படவுள்ளது. (ம-44)

# 20 தோற்கடிக்கப்படும் ராஜிதவும் விடாப்பிடி!

கொழும்பு, செப். 22



அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றிக்கொள்ள அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லை.

20ஆவது திருத்தத்துக்கு எதிர்ப்பை வெளியிடும் பலர் அரச தரப்புக்குள்ளே உள்ளனர். அவர்களையும் இணைத்துக்கொண்டு 20ஆவது திருத்தத்தைத் தோற்கடிப்போம் என நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசு தயாரித்துள்ள 20ஆவது திருத்தம் தொடர்பில் எங்களைவிட பொதுமக்களே அவதானமாக இருக்க வேண்டும். நல்லாட்சி அரசாங்க காலத்தில் 19ஆவது திருத்தத்தின் ஊடாக மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை மீண்டும் ஜனாதிபதியின் கீழ் கொண்டு வரும் நடவடிக்கையே 20ஆவது திருத்தத்தின் மூலம் முன்னெடுக்கப்படவுள்ளது.

20ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டால் அப்போது எங்களை விடவும் மக்களே அது தொடர்பில் அதிகம் பாதிக்கப்படுவர்.

மேலும் அரசு நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்க இருக்கும் 20ஆவது திருத்தம் மிகவும் கொடூரமான, ஏகாதிபத்திய திருத்தமாகும். மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை அரசுக்கும் அரசியல்வாதிகளுக்கும் கீழ் கொண்டுவரும் வகையிலே திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

அத்துடன் அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளது என்று தெரிவித்தாலும் அவர்களுக்கு பெரும்பான்மை இல்லை. ஏனெனில் 20 ஆவது திருத்தத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் சில திருத்தங்களுக்கு அரசில் இருப்பவர்களே எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். அதனால் அரசு 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதில் பிளவுபட்டிருக்கின்றது.

அதனால் 20க்கு எதிராக அரசில் இருக்கும் அதிகமானவர்கள் எங்களுடன் இணைந்து செயற்படுவார்கள். குறிப்பாக அமைச்சர்களான வாசு தேவ நாணயக்கார, விமல் வீரவன்ச போன்றவர்கள் ஜனநாயகத்தை பாதுகாக்க வெளியில் குரல் எழுப்புபவர்கள், உண்மையிலே ஜனநாயகத்தை பாதுகாக்க இவர்கள் செயற்படுகின்றார்களா என்பதை 20ஆவது திருத்தத்தில் அவர்களின் நிலைப்பாட்டின் மூலம் மக்கள் கண்டு கொள்வார்கள் - என்றார். (ம-இ)

# மலேசியத் தமிழர் கொலை; நால்வருக்கு மரணதண்டனை

மலேசியாவில் தமிழ் இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் நான்கு பேருக்கு உயர்நீதிமன்றம் மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

மலேசியாவின் மலாக்காவில் வசித்து வந்த பி.ஆர் சிவன் என்பவர் கடந்த 2013ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் திகதி வீட்டின் முன்னால் படுகொலை செய்யப்பட்டார். இது தொடர்பான வழக்கு விசாரணை மலேசிய உயர்நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இந்த வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டது. இதில், குற்றவாளிகளான எம்.பி நமசிவாயம், பி.நரேந்திரன்பதி, பி.சேதுபதி, ஜமன் மஷ்லான் ஆகியோருக்கு மரணதண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டது. நீதிபதியின் இந்த தீர்ப்புக்குப்பின், குற்றவாளிகள் கண்ணீர் விட்டு அழுதனர் என உள்ளூர் ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (வ-இ)

# இறைச்சிக்கடை போர்வையில் போதைப்பொருள் நிலையம்

## பொலிஸார் சுற்றிவளைப்பு

கொழும்பு,செப்.22

கோழி இறைச்சிக்கடை என்ற பெயரில் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து நடத்திச் செல்லப்பட்ட போதைப்பொருள் விற்பனை நிலையம் ஒன்று பொலிஸாரால் நேற்று சுற்றிவளைக்கப்பட்டது. இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சந்தேகத்தில் நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தலாப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து போதைப்பொருள் தயாரிக்கப் பயன்படும் புகையிலை, போதைப்பொருள் அடங்கிய 75 பொதிகள், இறக்குமதி செய்யப்பட்ட ஒருதொகை பாக்கு மற்றும் 10 கிலோ போதைப்பொருளுக்கான சுவையூட்டி என்பவை கைப்பற்றப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர். காலி நகரின் பிரதான பாடசாலைகள் இரண்டுக்கு அருகில் கோழி இறைச்சிக் கடை என்ற போர்வையில் இந்த போதைப்பொருள் விற்பனை நிலையம் இயங்கி வந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ற-இ)

# பிரபாகரன் உயிரிழந்தமையை அறிந்து வேதனையடைந்தேன்

## சொல்கிறார் பிள்ளையான்

கொழும்பு, செப். 22

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு போரின் இறுதியில் நடந்தது தொடர்பான செய்தியைக் கேட்ட பின்னர் மிகவும் வேதனையாக இருந்தது என நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தலைவர் மறைந்த செய்தியை கேட்டதும் மிகவும் கவலையாக உணர்ந்தேன். மதியம் மற்றும் இரவில் உண வருந்தக்கூட முடியாமல் மிகவும் கவலையுற்றேன்.



இது ஓர் இயல்பான விடயம். என்னதான் எதிரியாக இருந்தாலும் அவர்களது இறப்பில் கவலைகொள்வது சாதாரணமான விடயம். அது இயல்பு. விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து கருணா விலகுவதாக அறிவிப்பதற்கு சில தினங்களுக்கு முன்னர் என்னை அழைத்துப் பேசியிருந்தார். பிள்ளையான் இப்படி ஒரு முடிவு எடுக்க வேண்டிவரும்போல இருக்கு, நாங்கள் தனியாக இயங்குவது பற்றி யோசிக்கலாம் எனத் தெரிவித்தார். அதற்கு நான், நீங்கள் முடிவு எடுத்தால் அதற்கு நான் உடன்படுகின்றேன். ஆனால் அந்த முடிவு ஊடகங்களால் பெரிதாக்கப்பட்டு, நிரந்தரமாகப் பிரிய வேண்டிய சூழல் ஏற்பட்டால் எல்லாமே முடிந்து போய்விடும்.

எனவே கவனமாக முடிவெடுங்கள் எனத் தெரிவித்தேன்.

அதன் பின்னர் சில தினங்களில் இயக்கத்தில் இருந்து கருணா பிரிந்துவிட்டார் என்று ஊடகங்களில் வெளியான செய்தியைப் பார்த்தவுடன் மிகவும் வேதனையடைந்தேன். கடந்த காலங்களில் நல்லாட்சி அரசால் நான் பழிவாங்கப்பட்டேன். இதனை உறுதியாகக் கூறமுடியும்- என்றார். (ம-இ)

# கசிப்பு உற்பத்தி; இருவர் கைது!

கொழும்பு, செப்.22

சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி செய்து விற்பனையில் ஈடுபட்ட இருவரை பசறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எல்டெப் தோட்ட மேற்பிரிவில் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

பசறை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றை அடுத்து இந் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட இருவரையும் பதுளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உதவி பொலிஸ் அதிகாரி தலைமையிலான குழுவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (வ-இ)